பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 15, புதன்கிழமை 29.06.2017 கதிர் 235

## மண்டைதீவில் ரவைகள் மீட்பு

மண்டைதீவு, பூநகரிப் பகுதியில் உள்ள கடற்கரையில் இருந்து ஒரு தொகுதி துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்கரையில் உள்ள பற்றைக்காடு ஒன்றுக்குள்

பக்கம் 18 >>>

## அரசமைப்பு விடயத்திலிருந்து மக்கள் கவனத்தை திசைதிருப்பவே

# மாகாண சபையில் திட்டமிட்டுக் குழப்பம்!



### சம்பந்தன், சுமந்திரனின் பெயர் குறிப்பிடாமல் அவர்கள் மீது விக்கி காட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

உத்தேச அரசமைப்பு மாற்ற விவகாரத்தில் இருந்து தமிழ் மக்களின் கவனத்தைத் திசை திருப்பவே வடக்கு மாகாண சபையில் திட்டமிட்ட வகையில் குழப்பங்களை – சதி நடவடிக்கையை – அரசுடன் சேர்ந்து அரசு சார்புத் தமிழ் அரசியல்வாதிகள் மேற் கொண்டு வருகின்றனர்.

– இவ்வாறு பாய்ந்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

இந்த விடயத்தில் எந்தத் தமிழ் அரசியல்வாதியையும் அவர் பெயர் சுட்டிக் குறிப்பிடாவிட்டாலும், அவர் கையாண்ட சொற்கள் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனையும்,சுமந்திரனையும் மட்டுமே குறிப்பவையாக அமைந்திருந்தன என்பது வெளிப்படையாகத் தென்பட்டன.

பக்கம் 17 >>>



# பதுங்குகிறது தமிழரசுக் கட்சி இப்போதைக்குப் பாயாதாம்!

### முதல்வரின் மதியுரைஞர் நிமலன் கூட்டத்திலிருந்து வெளியேற்றம்



யாழ்ப்பாணம், ஜூன் 29

வடக்கு மாகாண சபையின் ஆளும் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமக்கு ஆதரவான உறுப்பினர்களை முதலமைச்சர்

பக்கம் 18 >>>

## சம்பந்தன் நாடு திரும்பிய பின்பே சாணக்கிய வியூகம் வகுக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் நேரடியாக முட்டி மோதும் போக்கில் புதிய அமைச்சர்கள் இருவரை தம் விருப்பப்படியும், அக் கட்சியின் விருப்புக்கு மாறாகவும் நியமிக்கும் அதிரடி முடிவை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னெடுத்துள்ளமை குறித்து தமிழரசுக் கட்சித் தலைமை கடுஞ் சீற்றமும் அதிருப்தியும் அடைந்திருக்கின்றது. எனினும், பதிலடி நடவடிக்கை ஒன்றையும் அக்கட்சி உடனடியாக முன்னெடுக்கும் சாத்தியம் அறவே இல்லை எனத் தெரிகிறது. அக் கட்சியின் செயற்பாட்டுத் தரப்பு பதுங்குகின்றது; பம்முகின்றது: வெளிநாடு சென்றிருக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடு திரும்பிய பின்பே பதிலடி நடவடிக்கை குறித்த வியூகம் வகுக்கப்படும் என அந்தத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

பக்கம் 18 >>>

## 3 மாதங்களுக்கு தற்காலிகமாகவே இரு அமைச்சர்களும் நியமனமாம்!

### முதல்வர் அறிவிப்பு

சர்வேஸ்வரனும், அனந்தியும் எனது வேலைப் பளுவைக் குறைப்பதற்காகத் தற்காலிகமாக – மூன்று மாதங்களுக்கே –அமைச்சர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

– இவ்வாறு நேற்றுத் தெளிவாகத் தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

நேற்று மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமக்கு ஆதரவான உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர்

பக்கம் 18 >>>

## சம்பந்தன் தலைமையில் கட்சித் தலைவர்களுடன் ஒன்று கூடிப் பேசிய பின்பே நிரந்தர நியமனம்

### தம் ஆதரவு உறுப்பினர்களிடம் முதல்வர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் விரைவில் கூடி ஆராய்வேன். அதன் பின்பே மாகாண அமைச்சர்கள் தொடர்பான நிரந்தர நியமன முடிவை எடுப்பேன்.

- இவ்வாறு தமக்கு ஆதரவான மாகாண சபை உறுப்பினர்களை நேற்று மாலை தமது இல்லத்தில் சந்தித்துப் பேசிய சமயம் தெளிவாகத் தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

பக்கம் 18 >>>



நியமனம் தற்காலிகம்; இழுபறி நிரந்தரம்...!

## சர்வேஸ்வரனும் அனந்தியும் அமைச்சர்களாகப் பதவியேற்பு

### இன்று காலை 10 மணிக்கு ஆளுநர் முன்னிலையில்



யாழ்ப்பாணம், ஜூன் 29

எதிர்பார்க்கப்பட்டபடி வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சர்வேஸ்வரனும், அனந்தியும் இன்று முறையே கல்வி அமைச்சராகவும், மகளிர் விவகார மற்றும் புனர்வாழ்வு அமைச்சராகவும் பதவியேற்கின்றனர்.

காலை 10 மணிக்கு ஆளுநர் அலுவலகத்

பக்கம் 18 >>>



## ✻ கழுத்து நெரித்துக் கொலை ✻ தப்புவதற்கு 2 கோடி ரூபா பேரம்

# கூட்டு வன்புணர்வையும், படுகொலையையும் நேரலையாக ஒளிபரப்பவே இந்தக் கொடூரம்

### நேற்று நீதிமன்றில் ஆரம்ப உரையில் அரசுத் தரப்பு விவரிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச சந்தையில் பின்னப்பட்ட சதிவலையிலேயே புங்குடுதீவு மாணவி வித்தியா வீழ்த்தப்பட்டிருக்கிறார் எனத் தெரிவித்திருக்கின்ற பதில் சட்டமா அதிபர் டப்புள்ள டி லிவேரா இத்தகையதொரு கூட்டு வன்புணர்வுக் காட்சியை நேரலையாக ஒளிபரப்பவே இவ் வழக்கின் எதிரியான சுவிஸ்குமாரும் அவரின் கூட்டாளிகளும் சதித்திட்டம் தீட்டியிருந்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சட்ட வரலாற்றில் முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட விசாரணை ஆயத்தின் கீழ் (ட்ரயல் - அட்பார்) வழக்கு விசாரணையாக வித்தியா படுகொலை வழக்கு தற்போது நடைபெறுகின்றது.

**வித்தியா படுகொலை வழக்கு**

யாழ் மேல் நீதிமன்றத்தில் நேற்று ஆரம்பமான இந்த விசாரணையின்போதே பதில் சட்டமா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

வித்தியா கடந்த 2015 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 13 ஆம் திகதி பாடசாலைக்குச் சென்றுகொண்டிருக்கையில் காலை 7.30 மணியளவில் கடத்திச் செல்

பக்கம் 17 >>>

# பல்கலைக்கழக மாணவர் போராட்டங்களுக்கு சோஷலிசக் கட்சியின் தூண்டுதலே காரணம்




## குற்றம் சுமத்துகிறார் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல

கொழும்பு, ஜூன் 29

கல்வி அமைச்சை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி பெரிய விளைவுகளை ஏற்படுத்திய பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பின்னால் முன்னிலை சோஷலிசக் கட்சியே செயற்படுகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

முன்னிலை சோஷலிசக் கட்சியே இவ்வகையான போராட்டங்களுக்கு மாணவர்களைத் தூண்டி வருகின்றது. இதற்கு மாணவர்கள் சிக்கிவிடாமல், கற்றல் நடவடிக்கையை மட்டுமே செய்ய வேண்டும் என்று சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க அறிவுரை வழங்கினார்.

சைட்டம் தனியார் மருத்துவப் பல்கலைக் கழகத்தை மூடுமாறு கோரி கடந்த 22 ஆம் திகதி கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சை முற்றுகையிட்ட அனைத்துப்பல்கலைக்கழக மாணவர்கள் 4 மணிநேரமாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, அங்கு விரைந்த கலகம் தடுப்பு பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சி செய்தனர்.

இதனால் இரு தரப்பினருக்கும் இடையே பெரும் மோதல் ஏற்பட்டதுடன், 8 மாணவர்களும் 2 பொலிஸ் அதிகாரிகளும் காயமடைந்தனர். சுகாதார அமைச்சின் சொத்துக்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.


இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இந்த விடயம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரவித்தவை வருமாறு:-

கடந்த 22ஆம் திகதி அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்திலுள்ளவர்கள் சுகாதார அமைச்சுக்குள்நுழைந்து வன்முறைகளில் ஈடுபட முயற்சித்தனர். அந்த மாணவர்கள் தங்களுடைய சுயநோக்கத்துக்காக இந்த நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்பதே எங்களது நம்பிக்கை.

அவர்களுக்குப் பின்னால் அரசியல் சக்தியொன்று செயற்படுகிறது. அந்த சக்தி தொடர்பானதகவலும் என்னிடம் உள்ளது. சோஷலிச முன்னிலைக் கட்சியே மாணவர்களைத் தூண்டிவிட்டது. எரிகிற நெருப்பில் மேலும் எண்ணெய் சேர்ப்பதற்கு இன்னும் சில அரசியல் கட்சிகள் இருக்கின்றன. மாணவ, மாணவிகளின் எதிர்காலத்தை மழுங்கடிக்கச் செய்யும் இவ்வாறான அரசியல் செயற்பாடுகளை யாருமே எதிர்ப்பார்கள். மாணவர்களின் எதிர்காலத்தை வளமாக்கச் செய்யும் நோக்கம் கொண்ட எந்த அரசியல் கட்சிகளும், பிரஜைகளும் இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடாது. பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கையைப் பாதிப்படையச் செய்தால் அவர்கள் சமூகமயப்படும் காலம் தாமதமடையும். இது அரசியல் சதி. ஜனநாயக அரசியலின் ஊடாகத் தங்களது அரசியல்நடவடிக்கையை செய்ய முடியாதவர்கள் மாணவர்களைக் கஷ்டத்துக்குள் தள்ளுகின்றனர். இதற்கு மாணவர்கள் சிக்கிவிடக்கூடாது. கல்வி கற்று நாட்டுக்கு எடுத்துக்காட்டாகச் செயற்படும் சிறந்த சமூகத்தினராக வருவதற்கே பல்கலைக்கழகத் துக்கு வருகின்றனர். ஆகவே கற்றல் நடவடிக்கையை மட்டுமே அவர்கள் கவனத்திற்கொள்ளவேண்டும்.-- என்றார். (எ)

# நிதி மோசடி வழக்கில் நாமலுக்குப் பிணை



நிதி மோசடி வழக்கு விசாரணை ஒன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 3 பிரதி வாதிகளைப் பிணையில் விடுவிக்கக் கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட மூவரையும் விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.


இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றது. இதன்போது 5 பிரதிவாதிகளில் இரண்டு பேர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை.

இந்தநிலையில், முன்னிலையாகாத இரண்டு பிரதிவாதிகளுக்கும் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளதுடன், வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இதேவேளை, 300 லட்சம் ரூபா பணத்தை முறைகேடாகப் பெற்றமை தொடர்பில் நிதி மோசடி சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய குபேர வாசல் கோபுரத்துக்கு அடிக்கல்

## நாளை காலையில் நடுகை



வரலாற்றுச் சிறப்பு மிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் வடதிசை வாயில் (குபேரவாசல்) கோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.


ஆனி உத்தர நன்னாளாகிய நாளை வெள்ளிக்கிழமை காலை 5.56 மணி முதல் 7.26 மணிவரையுள்ள சுபவேளையில் இந்தப் புனித கைங்கரியம் சிறப்புற நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன் இந்த நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

துர்க்காதேவியின் அடியார்களும் இந்த நிகழ்வில் பங்குபற்றி, குபேரவாசலுக்கான அடிக்கல்லை நட்டு, அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றேகுமாறு ஆலய நிர்வாக சபையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

அதேசமயம், குபேரவாசல் கோபுரத்திருப்பணிக்கு நிதியுதவி வழங்குபவர்கள் தேவஸ்தான அலுவலகத்தில் ஒப்படைத்து பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளலாம் என்றும் மேலதிக தகவல்களுக்கு 021 3213151 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ)

# யானைகளின் தாக்குதலிலிருந்து பாதுகாப்புக் கோரி செட்டிகுளம் பிரதேச மக்கள் நேற்று கவனவீர்ப்பு!





வவுனியா, ஜூன் 29

யானைகளின் தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாக்குமாறு வலியுறுத்தி வவுனியா - செட்டிகுளம் பகுதி மக்கள் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

செட்டிகுளம் பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் அப்பிரதேச மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அத்துடன் உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தநிலையில், வவுனியா - செட்டிக் குளம் பிரதேச மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி செட்டிகுளம் கமநல சேவை திணைக்களத்துக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, கடந்த காலங்களில் விவசாயிகள் மற்றும் மக்களுக்கு யானைகளால் ஏற்பட்ட உயிர் மற்றும் உடைமை இழப்புக்கள் தொடர்ந்தும் ஏற்பட இடமளிக்காது, விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், யானைகளின் "மேய்ச்சல் நிலமாக செட்டிக்குளம் மாறினால் பொருளாதாரத்தில் எவ்வாறு முன்னேற்றம் அடைவது?", "வில்பத்து சரணாலயமா? செட்டிகுளம் சரணாலயமா? அரசே பதில் சொல்", "திட்டமிட்டு எமது வாழ்வாதாரத்தை சேனைக்குறியாக்கி மக்களை பட்டினி போடாதே", "இறக்காதே இறக்காதே", எமது பிரதேசத்தில் யானைகளை இறக்காதே போன்ற கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குப் பேரணியாகச் சென்றனர்.

அத்துடன், பேரணியின் நிறைவில் செட்டிகுளம் பிரதேச செயலக கிராம சேவை தலைமைப் பீட உத்தியோகத்தர் சு. ஞானேஸ்வரனிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (எ)

## டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி பெரும் வீழ்ச்சி!

இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் பெரியளவில் வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் நேற்று வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 155.02 ரூபாவைக் கடந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

ரூபாவுடன் ஒப்பிடும் போது டொலரின் அதிகரிப்பு இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பெரிய அழுத்தத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகின்றது. இதே வேளை, இந்த மாதத்தில் அமெரிக்க டொலரின் பெறுமதி 155 என்ற இலக்கை இரண்டு முறை கடந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# சுமந்திரனைக் கொல்லச் சதி செய்த வழக்கின் 5 எதிரிகள் மீதும் அ'புர சிறையில் தாக்குதல்!

## அவர்களை யாழ்ப்பாணத்துக்கு மாற்றுவதற்கு உத்தரவு

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை கொலை செய்யசதித்திட்டம்தீட்டினர்எனக் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐந்து சந்தேகநபர்களும் அநுராதபுரம் சிறைச்சாலையில் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனராம்.

இந்த வழக்கு விசாரணை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகளான க.கிரேசியன் மற்றும் ஆர்.விஜயராணி ஆகியோர் இதனை மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

அத்தோடு, சிறை அதிகாரிகளின் பணிப்பின் பேரிலேயே சந்தேகநபர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சந்தேகநபர்கள் ஐவரையும் யாழ். சிறைச்சாலைக்கு மாற்றுமாறு உத்தரவிட்ட நீதிபதி ஆனந்தராஜா, தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தினத்தில் சிறைச்சாலையில் கடமையில் இருந்த அதிகாரிகள் தொடர்பானவிவரத்தை அடுத்தவழக்கு விசாரணையின் போது சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்தோடு, தாக்குதலுக்கு உள்ளான சந்தேகநபர்களை சட்ட வைத்திய அதிகாரியிடம் காண்பித்து மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்ட நீதிபதி, வழக்கை எதிர்வரும் ஜூலை மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (உ)

# கூட்டமைப்பைக் கூறுபோடச் சதி எச்சரிக்கின்றார் சித்தார்த்தன்!

தமிழ்தேசியக்கூட்டமைப்புப் பிளவடைந்தால் அரசமைப்பு உருவாக்கத்தில் தடைகளை ஏற்படுத்தலாம் என்று சிங்கள பேரினவாதசக்திகளும்,அரசாங்கத்திற்குள்ளேயே இருக்கும் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளநிலையில்,கூட்டமைப்பை கூறுபோடஒருபோதும்இடமளிக்க மாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.


தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு சிதறுண்டால் அது தமிழ் மக்களுக்குஒருபாரியபின்னடைவை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டியுள்ள சித்தார்த்தன், தமிழ் தரப்புமீதுபழியைப்போட்டுவிட்டு தப்பிக்கும் வழிகளை அரசாங்கமும் தேடிக்கொண்டிருக்கின்றது எனவும் இதற்குச் சந்தர்ப்பம் வழங்கக்கூடாதெனவும் மேலும் தெரவித்துள்ளார்.

அண்மைய அரசியல்நிலைவரங்கள்தொடர்பாகதாம்வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அரசுஇவ்வாறுகுறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தலைமைகளின் தவறினாலேயே தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்க முடியாமல் போனதென சர்வதேசத்திற்கு காட்டுவதற்கு அரசாங்கம் சந்தர்ப்பம் பார்த்திருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ள சித்தார்த்தன், இவ்வாறு நடக்குமாயின் அரசுக்கு அது பாரிய வெற்றியாக அமைந்துவிடும் என்றும், சர்வதேசத்தின் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்ள வேறுபாடுகளை களைந்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

# புலிகளை விடவும் ஆபத்தானது தமிழ் மக்கள் பேரவையாம்!

## ஞானசார தேரரின் கண்டுபிடிப்பு இது



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பார்க்கிலும், தமிழ் மக்கள் பேரவை மிகவும் ஆபத்தானது என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் வண. ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினருக்கு ஆதரவாக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் - விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் செயற்பாடுகளை விடவும் தமிழ் மக்கள்பேரவையின்செயற்பாடுகள் மிகவும் ஆபத்தானவை.

புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்த காலத்தில் எமக்கான அச்சுறுத்தல் என்னவென்று தெரிந்திருந்தது.

புலம்பெயர் தமிழர்கள் சர்வதேச ரீதியில் அவர்களது பிரிவினைவாதத்தை வெற்றிகொள்ளத்தீவிரமாகசெயற்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கிளிநொச்சி உள்ளிட்ட இடங்களில் வாழ்ந்த சிங்களவர்களைத் துரத்தியடிக்கின்றனர்.

தென்னிலங்கையில் அரசாங்கம், தானே ஆட்சி செய்துகொண்டிருப்பதாக கூறுகின்றது.

எனினும், வடக்கில் அரசாங்கத்தின் ஆட்சி நடைபெறவில்லை. வடக்கில் சிங்களவர்கள் வாழ்வதற்கான உரிமை இல்லாமல்போயுள்ளது. - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# புதிய அரசமைப்பு தயாரித்தல் பற்றிய செயலமர்வு

புதிய அரசமைப்பைத்தயாரித்தல்தொடர்பாகபொதுமக்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்திற்கான அலுவலகத்தின் ஒழுங்குபடுத்தலில் சிவில் சமூக அமைப்புக்களுக்கு புதிய அரசமைப்பை தயாரித்தல் படிமுறை தொடர்பாக அறிவூட்டும் கருத்தரங்கு நாளை காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் புதிய அரசமைப்பு உருவாக்கற் படிமுறை தொடர்பாகவும்; புதிய அரசமைப்பில் முன்மொழியப்பட்ட விடயங்கள் மற்றும் முன்மொழியப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றிபுதிய அரசமைப்புத்தயாரித்தல்தொடர்பானசெயல்முறையை அறிந்து கொள்வதோடு, இது விடயமாக நடைபெறும் கலந்துரையாடலில்பங்குபற்றிதங்கள் கருத்துக்களையும் தெரிவித்துக்கொள்ள முடியும். இந்த நிகழ்வின் ஒருங்கிணைப்பாளரும் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவருமான தே.தேவானந்த் இத்தகவலைத்தெரிவித்துள்ளார். (உ)

# புதிய அரசமைப்புக் குறித்து அடுத்த வாரம் முக்கிய முடிவு

கொழும்பு, ஜூன் 29

புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்குப் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை குறித்து அரசமைப்புக் கவுன்ஸிலின் வழிகாட்டல் குழு அடுத்த வாரம் கொழும்பில் கூடி முக்கிய முடிவுகளை எடுக்கும்.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த, சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் அது தொடர்பாக அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு :-

"இணக்கம் காணப்பட்ட அனைத்து விடயங்களையும் இடைக்கால அறிக்கையில் சேர்ப்பதா? அல்லது சர்வஜன வாக்கெடுப்பின்றி நிறைவேற்றக் கூடிய அம்சங்களை மட்டும்தான் இடைக்கால அறிக்கையில் இடம்பெறச் செய்வதா என்பது குறித்து அடுத்த வாரத்தில் நடைபெறும் அரசமைப்புக் கவுன்ஸிலின் வழிகாட்டல் குழுவில் நாம் தீர்மானிப்போம்." - என்றார் பிரதமர்.

அதாவது -

புதிய அரசமைப்பு முற்றிலும் புதிதாக உருவாக்கப்பட்டு, நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையாலும், சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களாலும் அங்கீகரிக்கப்படுவதாக இருக்குமா?

அல்லது, அடிப்படை மாற்றங்களைத் தவிர்த்து, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் நிறைவேற்றப்படக்கூடிய அம்சங்களை மட்டுமே புதிய உத்தேச அரசமைப்புக் கொண்டிருக்குமா என்பது குறித்தே அடுத்த வாரம் தீர்மானிக்கப்படும்எனப்பிரதமர்தெரிவித்துள்ளார். (உ)

(இக் கூட்டம் பற்றிய மற் றொரு செய்தி 8 ஆம் பக்கத்தில்)

# இரணைதீவு மக்களின் மீள்குடியமர்வு: இரணைப்பாலைக் கூட்டத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 29

கிளிநொச்சி மாவட்டம் நாச்சிக்குடா, இரணைதீவு மக்கள் மீண்டும் தமது சொந்த இடத்துக்குத் திரும்ப அனுமதிக்கப்படவேண்டும் என்று கோரி நடத்தி வரும் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை அடுத்து, அந்த மக்களின் பிரச்சினைகள் குறித்து அந்த மக்கள் போராட்டம் நடத்திவரும் முழங்காவில் இரணைப்பாலையில் அது தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.



இந்தக் கலந்துரையாடலில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்த்தனா, இராஜாங்க அமைச்சரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிறிதரன், அங்கஜன் இராமநாதன் மற்றும் பிரதேச செயலர், கடற்படை அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களின் பிரதிநிதிகளும், அப்பிரதேச வண. பிதாக்களும் மக்கள் தரப்புக்கருத்துகளைஎடுத்துரைத்தனர்.

இந்த மக்களின் கோரிக்கை தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் ஒரு முடிவை எடுத்து அறிவிப்பது குறித்து நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இவ்விடயத்தை ஒட்டி கொழும்பில் பாதுகாப்பு உயர் மட்டத்தில் ஜனாதிபதி தலைமையில் கூடி ஆராய்ந்து முடிவெடுப்பது என்றும் -

தேவைப்பட்டால் மாத முற்பகுதியில் நாடாளுமன்றம் கூடும் சமயம் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இவ்விடயம் சம்பந்தமாக ஜனாதிபதியுடன் பேசுவது என்றும் - தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது. (உ)

புதிய ஆங்கிலப் பாடநெறிகள் ஆரம்பமாகின்றன

DIPLOMA IN ENGLISH (6 MONTHS)



16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் சிறந்த பாடநெறி (பல்கலைக்கழகத்திற்கு தெரிவான / பல்கலைக்கழக / உயர் கல்வி மாணவர்கள் / வெளிநாடு செல்ல இருப்போர் / அலுவலர்கள்)

ஆரம்பம் : 01.07.2017

சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மதியம் 12.30 - 3.00 மணி வரை இந்தப் பாடநெறி இடம்பெறும்.

E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

இல. 372 D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
( வீரமாகாளிஅம்மன் கோவில் அருகில் )

Tel : 0212217106 / 0770610271
0773400418 / 0774924166

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## தமிழரசு மீதான போர்ப்பிரகடனம்

நேற்றைய 'காலைக்கதிர்' முதற்பக்கத்தில் குறிப்பிட்டபடி இரண்டு புதிய மாகாண அமைச்சர்கள் இன்று பதவியேற்கின்றார்கள். வடக்கு மாகாணத்தின் முதலாவது பெண் அமைச்சராகின்றார் அனந்தி சசிதரன். கல்வி அமைச்சராகின்றார் சர்வேஸ்வரன்.

இந்த நியமனங்கள் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் பக்கத்து நியாயங்கள் ஏற்கனவே நேற்றைய பத்திரிகையின் முற்பக்கச் செய்தியில் விவரமாக வெளியாகியுள்ளன.

பல்வேறு துறைகளை நிர்வகிக்க வேண்டிய மாகாண சபைகளுக்கு ஆகக் கூடியது முதலமைச்சர் உட்பட ஐந்து அமைச்சர்கள் தான் நியமிக்கப்படலாம். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் அந்தளவுக்குத்தான் வாய்ப்பளித்துள்ளது. அதனால் ஒவ்வோர் அமைச்சர்களும் ஏகப்பட்ட துறைகளைக் கையாள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இந்தக் காரணத்தால் வடக்கு மாகாண முதலமைச்சர் பல திணைக்களங்கள், துறைகள், பிரிவுகள் என்று ஏகப்பட்ட விடயங்களைக் கவனிக்க வேண்டியவராக இருக்கின்றார்.

இந்தச் சூழலில் வடக்கு மாகாண சபையில் அண்மையில் கட்டவிழ்ந்த அரசியல் காரணங்கள், களேபரங்களை அடுத்து அந்த ஐந்து அமைச்சர்களில் இருவரின் பொறுப்பையும் தாமே தற்காலிகமாக ஏற்க வேண்டியவரானார் முதலமைச்சர் விக்னேஸ்வரன். அவரது வயதுக்கும் முதல்வர் பொறுப்புக்கும் இந்தச் சுமை அதீதமானது என்பது புரிந்துகொள்ளத்தக்கதே. அந்தச் சுமையை விரைந்து இறக்கி வைக்க அவர் விரும்புகின்றமை முற்றிலும் நியாயமானதும்தான்.

வடக்கு மாகாண சபையை ஒட்டி எழுந்துள்ள அரசியல் சர்ச்சையில் புதிய அமைச்சர்களைப் புரிந்துணர்வுடனும், ஆளும் கட்சியின் சகல தரப்புகளின் இணக்கத்துடனும் நியமிக்கும் காலம் வரை இந்த மேலதிக இரு அமைச்சுகள் என்ற சுமையை சுமப்பது என்பது முதல்வருக்கு கஷ்டமானதாக இருந்திருக்கலாம்.

அதற்காக அவர் தற்காலிக ஏற்பாடாக இரு உறுப்பினர்களிடம் இந்த அமைச்சுகளின் பொறுப்பைக் கொடுக்கக் கூடும் என்று அவரது முடிவுக்கு நியாயப்படுத்தல்கள் கூறப்படுகின்றன.

அது மட்டுமல்லாமல், ஏற்பட்ட இரண்டு அமைச்சர்கள் வெற்றிடங்களுக்கும் நிரந்தர நியமனம் ஒன்று அவசரப்பட்டு வழங்கப்பட முடியாது என்பதற்கும் முதல்வர் தரப்பில் சில நியாயங்கள் கூறப்படுகின்றன. அவையும் மறுக்கற்பாலவையல்ல.

பதவி விலகிய இரண்டு அமைச்சர்கள் தொடர்பான குற்றச்சாட்டு அறிக்கைகளை விரைந்து மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கு முதல்வர் தீர்மானித்துள்ளார். ஆகவே, மீளாய்வு நடவடிக்கைகள் குறுகிய காலத்தில் நடந்து முடியப் போகின்றன.

மீளாய்வின் முடிவு சம்பந்தப்பட்ட இரு முன்னாள் அமைச்சர்களுக்கும் அல்லது அவர்களுள் ஒருவருக்கு சார்பானதாக அமைந்தால், அந்த அமைச்சர்கள் இருவருக்கும் அல்லது ஒருவருக்கு மீண்டும் அமைச்சுப் பதவியை வழங்குவதுதான் நியாயமாக இருக்க முடியும் என்று முதல்வருடன் தொடர்புடைய வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

நிரந்தர அமைச்சர் ஒருவரை இப்போது நியமித்தால், பிறகு பழையவரில் ஒருவரை அல்லது இருவரையும் மீள நியமிக்க வேண்டி வந்தால், புதிதாக நியமிக்கப்பட்டவர்களை பதவி விலக்க வேண்டிய நெருக்கடி ஏற்படும்.

இதைத் தவிர்ப்பதற்காகத்தான் தற்காலிக ஏற்பாடு என்ற முன்னறிவிப்போடு தாம் விரும்பிய - தம்மால் தேவைப்பட்ட நேரத்தில் இலகுவாகப் பதவி விலக்கப்படக் கூடியவர்கள் என்று கருதும் - தம்மால் இணக்கத்துடன் கையாளக் கூடியவர்கள் என்று தாம் எண்ணும் - இருவருக்கு தற்காலிக அமைச்சர் பதவிகளை வழங்குகின்றார் முதல்வர் என அவர் தரப்பில் நியாயம் கூறப்படுகின்றது.

இந்தக் கருத்துகள், நியாயங்கள் மறுக்கக் கூடியவை அல்ல.

ஆனால், இந்த நடவடிக்கையை மூடுமந்திரச் செயலாக - ஒரு குறுகிய வட்டத்துக்குள் திட்டமிட்டு - முதல்வர் முன்னெடுகின்றமையும் அது முன்னெடுக்கப்படும் முறையும் மிகத் தவறானவை.

ஏற்கனவே, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுடன் முதல்வர் நடத்திய சந்திப்பு சமயத்தில், அனந்தியின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அனந்தி சசிதரன் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் எத்தகைய சர்ச்சையில் இருக்கின்றார் என்பது ஏற்கனவே முதல்வருக்கு நேரடியாக கட்சித் தலைவரினால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

போதாக்குறைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது கட்சி சார்பில் அமைச்சுப் பதவிக்கு ஆனோல்டின் பெயரை சிபாரிசு செய்துள்ளது. எழுத்து மூலம் அக் கட்சியின் செயலாளர் அதனை முதல்வருக்கு அறிவித்துமிருக்கின்றார்.

ஏற்கனவே முதல்வருக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வாபஸ் பெறப்பட்டு இப்போதுதான் விடயம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருக்கின்றது. அந்த விடயம் பற்றிய செய்திகள் அச்சாகிய மை காய்வதற்கு இடையில் இந்த நடவடிக்கையை முதல்வர் எடுத்திருக்கின்றார்.

அதுவும், தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கு முன்னறிவித்தலோ தகவலோ தன்னும் கொடுக்காமல் இந்த நடவடிக்கையை முதல்வர் எடுத்திருக்கின்றார். அந்த வகையில் பார்த்தால் இது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக அவர் முன்வைத்திருக்கும் போர்ப் பிரகடனம்தான்.

முன்னர் முதல்வருக்கு எதிராக வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை, இப்போது வேறு வடிவம் எடுத்து அவர் நியமிக்கும்




## 2 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அமைக்க முசலி மக்கள் எதிர்ப்பு

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சவேரியார்புரம் கிராம அலுவலர் பிரிவில் இரண்டு கிராம அபிவிருத்திச் சங்கங்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சவேரியார்புரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக சவேரியார்புரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சவேரியார்புரம் கிராம அலுவலர் பிரிவில் இரண்டு கிராம அபிவிருத்திச் சங்கங்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வளவு காலமும் எமது கிராமத்தில் உள்ள மக்கள் அன்புடனும், ஒற்றுமையுடனும் வாழ்ந்து வந்தார்கள். மக்களுக்குள் பொது, சமூக, மத வேறுபாடுகள் என்றும் இருந்ததில்லை.

ஆனால், தற்போது முசலி பிரதேசத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதேச செயலாளர் ஒரு கிராமத்தில் இரண்டு கிராம அபிவிருத்தி சங்கங்களை உருவாக்கக் கூறியதால் இரண்டு மதங்களுக்கிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள சங்கத்தில் ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களை மாத்திரம் இணைத்துக் கொண்டு புதிய சங்கம் உருவாக்கும் ஆரம்பக் கூட்டமும் கூட்டப்பட்டுள்ளது.

அந்தப் புதிய சங்கத்தில் சவேரியார்புரம் கிராம அலுவலகர் பிரிவில் மட்டும் இல்லாமல் சிலாபத்துறை கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஒரே மதத்தைச் சேர்ந்த சகோதரர்களையும் இணைத்து இவ்வேலையை ஆரம்பித்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள சங்கத்தில் உள்ளவர்கள் சிலர் எமது கிராமத்தில் உள்ள ஏனைய சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். குறிப்பாக சவேரியார்புரம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் உதவிகளையும் பெற்றுள்ளனர்.

அந்த அங்கத்தவர்களே தற்போது தனியான கிராம அபிவிருத்திச் சங்கத்தை உருவாக்க முசலி பிரதேச செயலாளரால் ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்.

எனவே புதிதாக எமது கிராமத்தில் உருவாக்கப்படவுள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்தால் ஏற்படவுள்ள முரண்பாடுகளை நிறுத்தி மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் புதிதாக அமைக்கப்படவுள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்தை தடை செய்வதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.- என்றுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கல நாதன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ஹபறணை - பொலநறுவை வீதி விபத்தில் இருவர் உயிரிழப்பு!

ஹபரணை–பொலநறுவை வீதியின் அம்பகஸ்வெவ பிரதேசத்தில், நேற்றுக் காலை 7.45க்கு இடம்பெற்ற வாகன விபத்தில், இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலநறுவையில் இருந்து தம்புள்ளை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் தம்புள்ளையில் இருந்து ஹபரணை நோக்கிப் பயணித்த வானும் நேருக்கு நேர் மோதியமையால் இந்தவிபத்துஇடம்பெற்றுள்ளது.

தொம்பே பிரதேசத்தைச் சேர்ந்த 34 மற்றும் 46 வயதுடைய இருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த வான் சாரதி ஹபரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரணைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## ஜப்பான் சென்று பயிற்சி பெற இலங்கையருக்கு வாய்ப்பு!

கொழும்பு, ஜூன் 29

ஜப்பான் தொழில்நுட்ப சேவைசார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவைசார் பயிலுநர்களுக்கும் வாய்ப்பளிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

இலங்கை தொழில்நுட்ப சேவை சார் பயிலுநர்களுக்கு ஜப்பானில் தொழில் நுட்ப சேவைசார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் வாய்ப்பளிப்பதற்காக ஜப்பானில் புகழ்பெற்ற மனித வள அபிவிருத்தி நிறுவனத்துடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

### ஆரோக்கியமான வாழ்க்கைக்கு:

- காலை உணவை கட்டாயம் எடுத்தல் நன்று.
- சரியான அளவுகளில் உட்கொள்ளல்.
- சரியான நேரத்தில் உட்கொள்ளல்.
- ஆரோக்கியமான உணவுகளை தேர்வுசெய்து உட்கொள்ளல்.
- போஷணைக் கூறு இழப்பற்ற சமையல் முறை.
- சீனி, உப்பு, கொழுப்பு உணவுகளில் கட்டுப்பாடு.
- தினமும் உடற்பயிற்சி.
- உற்சாகமான மனநிலை.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்.மாநகரசபை.

### நாளை

30.06.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: உத்தரம் பி.இ 1.18 வரை
திதி: ஸ்ப்தமி மு.இ 11.05 வரை

சுபநேரம் :5.56 - 7.26 வரை
இராகுகாலம் : 10.26 - 11.56 வரை

# போதைப் பொருள் தொடர்பான பிரச்சினையை மக்கள் சமூகமும் ஊடகங்களும் மறந்துள்ளன!

## பிரதமர் ரணில் கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 29

இயற்கை அனர்த்தம், அரசியல் பிரச்சினை மற்றும் வேலைநிறுத்தம் காரணமாக போதைப்பொருள்தொடர்பான பிரச்சினையை மக்கள் சமூகமும் ஊடகங்களும் மறந்துள்ளன என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

போதைப்பொருள் பாவனை மற்றும் எடுத்துச் செல்வதைத் தடுப்பது தொடர்பான சட்டத்தை வலுவூட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக அபாயகர ஔடத கட்டுப்பாட்டுத் தேசிய சபையின் சட்டம் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

இலங்கை இன்று சர்வதேச போதைப் பொருள் கடத்தலில் மத்திய நிலையமாகக் காணப்படுகிறது. நாட்டின் போதைப் பொருள் பாவனையை மேற்கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பொலிஸாரால் அமைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவும் மறுசீரமைக்கப்படும்.

போதைப்பொருள்பாவனை மற்றும் விநியோகம் தொடர்பான பிரச்சினையை நாடு எதிர்கொண்டிருக்கும் பெரிய சவாலாகும்.

எதிர்வரும் 2 வருட காலப் பகுதியில் நாட்டில் போதைப் பொருள் பாவனை மற்றும் கடத்தலைத் தடுப்பதே இதன் முக்கிய இலக்காகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## வெளியுறவுக் கொள்கை மாநாடு!

கொழும்பு, ஜூன் 29

இலங்கையின் வெளியுறவுக் கொள்கை தொடர்பான மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாநாடு இன்றும் நாளையும் லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தில் நடைபெறவுள்ளது எனத் தெரியவந்துள்ளது. மாநாட்டுக்கு வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தலைமை தாங்கவுள்ளார்.

இதன்போது இலங்கையின் வெளியுறவுக் கொள்கை அடிப்படையிலான தற்போதைய வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வது குறித்தும் ஆராயப்படவுள்ளது.

இதுதவிர, தேசிய பாதுகாப்பு, மறுசீரமைப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

சீனா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் வளவாளர்கள் இந்த மாநாட்டில் உரையாற்றவுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் செயற்பாட்டாளர் ராதிகா குமாரசுவாமியும் மாநாட்டில் உரையாற்றவுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது. (க)

## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்று இடங்களை வழங்க நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 29

நாட்டில் பல பாகங்களில் நிலவும் சீரற்ற காலநிலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்று இடங்களை வழங்குவது தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றுள்ளது.

அத்துடன், இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்ட செயலாளர்களினால் காணித்தேவை மற்றும் அடையாளம் காணப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனைத் தொடர்ந்து அரச காணிகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச காணிகள் போதுமானவையாக இல்லாத பட்சத்தில் தோட்ட நிறுவனங்களின் வசம் உள்ள தனியார் காணிகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் தொடர்பில் ஆராயுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, சஜித் பிரேமதாஸ, நவீன் திஸாநாயக்க, கயந்த கருணாதிலக உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர். (க)

## வெளிநாட்டவரின் மோசடி!

காலியில் போலியான டொலர்களை வழங்கி காணித் துண்டொன்றை கொள்வனவு செய்ய முயற்சித்தார் எனக் கூறப்படும் வெளிநாட்டவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

காலி, ரூமஸ்ஸல பகுதியில் காணி ஒன்றைக் கொள்வனவு செய்ய முயற்சித்தார் எனக் கூறப்படும் வெளிநாட்டவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

71 ஏக்கர் காணியை 50 கோடி ரூபா பணத்துக்கு 99 வருட குத்தகை அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டவர் முயற்சித்துள்ளார்.

எனினும், அவர் போலியான நாணயங்களை வழங்கிய நிலையில், இந்த வெளிநாட்டவர், சுற்றுலா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியநாட்டவர்போன்று நடித்த நைஜீரிய நாட்டவர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அஹுங்கம ஹோட்டல் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான இந்தக் காணி விற்பனைக்கு உள்ளதாகக் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் விளம்பரம் செய்யப்பட்டது.

இந்த நிலையில், அந்த விளம்பரத்துக்கமையவே சந்தேகநபர் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

## புதிய அரசமைப்பு நாட்டை இரண்டாக பிளவுபடுத்தும்

### இப்படிக் கூறுகிறார் மஹிந்தர்



நாட்டை இரண்டாகத் துண்டாடும் வகையில் புதிய அமைப்பொன்றை அறிமுகப்படுத்த நல்லாட்சி அரசு முயற்சிக்கின்றது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகல் பிரதேசத்தில் விஹாரை ஒன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமய வழிபாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்பில் பௌத்த மதத் துக்கு உரித்தான விடயங்களில் ஒரு சில மாற்றங்களை ஏற்படுத்தவும் அவர்கள் முயன்று வருகின்றனர்.

மேலும் சர்வதேச நீதிபதிகளை இலங்கைக்குள் அனுமதிக்க மாட்டோம் என்று அரசு கூறினாலும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் சர்வதேச நீதிபதிகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியுள்ளார். - என்றார்.

## கற்பித்துக் கொண்டே உயிரை விட்ட விரிவுரையாளர்!

### சோகமயமானது சப்ரகமுவ பல்கலைக்கழகம்

கொழும்பு, ஜூன் 29

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விரிவுரையாளர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந் துள்ளார்.

மொழியியல்துறை முதுநிலை விரிவுரையாளரான இவர் கடந்த 26 ஆம் திகதி மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்த போது மாரடைப்பால் மயங்கி விழுந்துள்ளார்.

பொலன்னறுவை, மன்னம்பிட்டியைச் சேர்ந்த கலாநிதி எஸ்.வை.ஸ்ரீதர் என்ற விரிவுரையாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல்துறையில் கற்றுப் பட்டம் பெற்று, சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்துள்ளார்.

அத்துடன், சிங்கள மாணவர்களுக்குத் தமிழும், தமிழ் மாணவர்களுக்குச் சிங்களமும் கற்பித்து இன நல்லிணக்கத்துக்குப் பங்களிப்புச் செய்துள்ளார். ஏராளமான தமிழ் பட்டதாரிகள் உருவாகுவதற்கு இவர் பாடுபட்டுள்ளார்.

எனவே, இவரது மரணம், பலாங்கொடை உள்ளிட்ட பகுதிகளின் கல்விச் சமூகத்தினரைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவரது பூதவுடல் பல்கலைக்கழகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் பலாங்கொடை, பளீல் ஹாஜியார் மாவத்தை, 52 ஏ இலக்க இல்லத்திலும் வைக்கப்பட்டுள்ளது.

விரிவுரையாளரின் இறுதிக் கிரியை நாளை காலை 10 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீடொன்றிலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, ஜூன் 29

மட்டக்களப்பில் பாலமீன்மடு பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து இளைஞனின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டுள்ளது.

பாலையா ஜெயகாந்தன் என்னும் 16 வயதுடைய இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த இளைஞனின் சடலம் வீட்டின் அறை ஒன்றில் இருந்து, கழுத்தில் சேலை சுற்றப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட குற்றதடயவியல் பிரிவுப் பொலிஸார் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தமிழ்க் கூட்டமைப்புக்குள் ஒற்றுமை கட்டிக்காக்க வேண்டியது அவசியம்



## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கருணாகரம் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஜூன் 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஒற்றுமை கட்டிக்காக்கப்பட்டு, ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் என்பதில் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களும் உறுதியாக உள்ளனர் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

எங்களுக்குள் உருவான ஒற்றுமையீனமே, வடமாகாண சபையில் அண்மையில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு காரணம் என்பது தொடர்பில் அனைவரும் அறிந்ததே என்று அவர் மேலும் கூறினார்.

தனித்து விடப்பட்டதும் அபிவிருத்தி அடையாததுமான கிராமங்களைத் தெரிவுசெய்து அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் தொடர்பில் ஆராயும் கூட்டம், போரதீவுப்பற்று, பலாச்சோலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்காலத்தில் நாம் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டிய தேவையுள்ளது. கடந்த காலத்தில் எமது உரிமைக்காகப் போராட்டம் இடம்பெற்று, தற்போது அரசியல் தீர்வுக்காக நாம் காத்திருக்கும் நிலையில், இதுவரையில் நிரந்தரத் தீர்வை நாம் பெற்றுக் கொள்ளாத நிலைமையே இருந்து வருகின்றது. எனவே, நாம் ஒரு குடையின்கீழ் செயற்படவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

எதிர்வரும் செப்ரெம்பருடன் கிழக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடையவுள்ளநிலையில், கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இந்த ஆண்டுநடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழரின் விகிதாசாரத்தைக் கொண்டு, நாம் 19 உறுப்பினர்களைப் பெற்றுத் தனித்து ஆட்சி அமைக்க முடியாது. ஆனாலும், 15 இற்கும் மேற்பட்ட மாகாணசபை உறுப்பினர்களைக் கொண்டு வரக்கூடிய பலம் உள்ளது. அவ்வாறு கொண்டுவரும் போதே, கிழக்கு மாகாணத்தில் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த முதலமைச்சர் ஒருவரைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். அதற்காக மாகாண சபையில் த.தே.கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பதுடன், தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதமும் அதிகரிக்கப்பட வேண்டும்.

மாவட்ட ரீதியில் தமிழர்களின் வாக்களிப்பு வீதம் 50 சதவீதத்தை தாண்டாத நிலைமை காணப்படுகின்றது. ஏனைய இனங்கள் 95 சதவீதத்துக்கு அதிகமாக வாக்களிக்கின்றார்கள். இந்த நிலைமை மாற வேண்டும். கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.-என்றார். (எ)

# செங்கலடியில் பாரம்பரிய உணவகம்





பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு இந்தத் திட்டம் பேருதவியளிக்கும் கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கு அருகில் இந்த மையம் அமைந்துள்ளதால், உள்ளூர் மற்றும் பிற உற்பத்திப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பும் ஏற்படும்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்காக பல்வேறு பயிற்சிகளையும் கட்டுமானங்களையும் தொழில்நுட்பங்களையும் புதிய தொலைநோக்குகளையும் உருவாக்குவதற்காக தொடர்ந்தும் பணியாற்றுவோம்.-என்றார்.(எ)

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும், பெண்களின் பொருளாதாரத்தையும் மேம்படுத்திக் கொள்வதற்கு உள்ளூர் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் வாய்ப்பளிக்கும் என்று ஐரோப்பிய அபிவிருத்திக்கான தலைமை ஒத்துழைப்புத் திட்டத்தின் செயலாளர் தெரிவித்தார்.

ஏறாவூர்ப் பற்றுப் பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள செங்கலடி கிழக்கில் பாரம்பரிய உணவகம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது. இதன்போது உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு கோடி 75லட்சம் ரூபா செலவில் உள்ளூர் உற்பத்திகளை விற்பனை செய்யக்கூடிய 5 கடைத் தொகுதிகள் மற்றும் சுமார் 100 பேர் அமர்ந்திருந்து உண்ணக் கூடிய உணவகம் என்பன இதற்குள் அடங்குகின்றன.

45 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பத்தினர் அங்கு நேரடியாகத் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரி கல்வி நடவடிக்கை ஜூலை 3 இல் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஜூன் 29

அட்டாளைச்சேனைக் கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவாகிய 2016 -2018 ஆம் கல்வி ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்ட புதியபயிலுநர் ஆசிரியமாணவர்களுக்கான கல்வி நடவடிக்கை, எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே, அன்றையதினம் காலை 8.30 மணிக்குமுன்னர் கல்லூரிக்கு மாணவர்கள் வருகைதர வேண்டும் என்று கல்லூரியின் பீடாதிபதி எம்.ஐ.எம்.நவாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாணவர்களுக்கான பதிவுகள் கடந்த 20ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெற்றன.

ஆரம்ப கற்கைநெறிக்கு 125 பேரும் விஞ்ஞானப் பாடக் கற்கைநெறிக்கு 40 பேரும் கணிதபாடக் கற்கை நெறிக்கு 20 பேரும், இஸ்லாம் பாடக்கற்கை நெறிக்கு 25 பேரும், விசேட கல்விப் பிரிவுக்கு 15 பேரும் இம் முறை தெரிவாகியுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.(எ)

# திருமலை பெண்கள் வலையமைப்பு அலுவலகம் தாக்கப்பட்டதை கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணி




திருகோணமலை, ஜூன்29

திருகோணமலை மாவட்ட பெண்கள் அமைப்பின் அலுவலகம் தாக்கப்பட்டதைக் கண்டித்து மாவட்ட பெண்கள் வலையமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் நாம் இலங்கைப் பெண்கள் அமைப்பினர் இணைந்து கண்டனப் பேரணியுடனான ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று முன்தினம்காலை திருகோணமலைமாவட்டபெண்கள் வலையமைப்பின் அலுவலகத்துக்கு முன்பாக நடைபெற்றது.

இதன்போது போராட்டகாரர்கள், திருகோணமலைமாவட்டபெண்கள் அமைப்பின்காரியாலயம் திங்கட்கிழமை தாக்கப்பட்டுள்ளதாகவும், முக்கிய பொருள்களும் குறிப்பாகமுக்கிய ஆவணங்கள் களவாடப்பட்டுள்ளன என்றும் தெரிவித்து போராட்டத்தை தொடர்ந்திருந்தனர்.

கடந்த சனிக்கிழமை அலுவலகத்தை மாலை பூட்டி விட்டு சென்ற நிலையில், நேற்று முன்தினம் அங்கு வந்து பார்த்த போது அலுவலகத்தினுள் இருந்த இரண்டுமடிக்கணினிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் போன்றவை களவாடப்பட்டிருந்தமையை அவதானித்துள்ளனர். பின்னர், இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றை தெரிவித்திருந்தனர்.

போராட்டத்தின் போது திருகோணமலை மாவட்ட அரச அதிபருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன், பெண் உரிமை மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தி போராட்டத்தின் நிறைவில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பெண்கள் வலையமைப்பின் அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் கைதுசெய்யப்படவேண்டும் என்று வலியுறுத்திய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள், திருடப்பட்டுள்ள பொருள்களை உடனடியாக மீட்டுத்தருமாறும் வலியுறுத்தியுள்ளனர்.

பேரணியில் திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் உறுப்பினர்களுடன் நாம் இலங்கைப் பெண்கள் அமைப்பினரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# சம்பூரில் மின் உற்பத்தி திட்டமும் கைவிடப்பட்டது!

## அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 29

சம்பூரில் இயற்கை எரிவாயு மின்நிலையத்தை அமைக்கும் முடிவை இலங்கை அரசு கைவிட்டுள்ளது. அங்கு 50 மெகாவாற் திறன் கொண்ட சூரிய மின்சக்தி நிலையமே அமைக்கப்படும் என்றும் சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூரில், இந்தியாவின் முதலீட்டுடன், 500 மெகாவாற் அனல் மின் திட்டத்தை அமைக்க, இந்திய-இலங்கை அரசுகளுக்கிடையில், கடந்த 2011 ஆம் ஆண்டு உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இது தொடர்பான கட்டுமான உடன்பாடும் இலங்கை மின்சார சபைக்கும், இந்தியாவின் தேசிய அனல் மின்கழகத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

எனினும், சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு எதிரான பரப்புரைகளை மேற்கொண்டதுடன், சூரிய மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க வேண்டும் என இந்தியாவிடம் கோரியது.

அதேவேளை, இலங்கை அரசு, அனல் மின் நிலையத்துக்குப் பதிலாக, இயற்கை எரிவாயு மின் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்தியாவிடம் இலங்கை அரசு கோரியிருந்தது. அதற்கு இந்தியாவும் இணங்கியிருந்தது.

எனினும், சம்பூரில் இயற்கை எரிவாயு மின் திட்டத்தை அமைக்க, மின்சாரசபையின் பொறியியலாளர்கள் சங்கம் கடும்எதிர்ப்பைவெளியிட்டது.

இந்த நிலையிலேயே, சம்பூரில் 50 மெகாவாற் திறன் கொண்ட சூரிய மின்சக்தி திட்டமே நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அத்துடன், சுற்றாடலுக்குப் பாதிப்பில்லாத, சூரிய மற்றும் காற்றாலை மின்சக்தித் திட்டங்களுக்கே மின்சார சபை முன்னுரிமை கொடுக்கும்.

தலா ஒரு மெகாவாற் உற்பத்தித் திறன் கொண்ட- சிறிய எவிலான 60 சூரிய மின்சக்தி உற்பத்தி திட்டங்களில் முதலீடு செய்வதற்கு, 20 முதலீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து ஓர் அலகு மின்சாரத்தை 12.73 ரூபாவுக்கு மின்சார சபை கொள்வனவு செய்யும்.- என்றும் அவர் கூறியுள்ளார்.

# முகநூல் மோசடிகள்!

முகநூல் ஊடாக அறிமுக மாகும் நண்பர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முகநூல் நண்பர்களாகி பலவழிகளில் ஏமாற்றி வெவ்வேறு வங்கிக் கணக்குகளுக்கு நிதிவைப்பிடச்செய்யும் மோசடிகள் தொடர்பாக இதுவரை 15 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வெளிநாடுகளில் இருந்து சுற்றுலா வருபவர்கள் மற்றும் கல்விக்காக வருபவர்கள்முகநூல்உள்ளிட்ட சமூக வலைத் தளங்கள் ஊடாக உள்நாட்டவர்களை நட்பு பாராட்டி இந்த மோசடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

பலவிதமான முகநூல் முகவரிகளில் இருந்து விடுக்கப்படும் நட்பு அழைப்புகளில் இருந்து பரிசுத்தொகைகள் கிடைக்கப்பெறும் எனக் குறுஞ் செய்திகள் அனுப்பப்படுகின்றமையும் குற்ற விசாரணைத்திணைக்களத்தின் ஆரம்ப விசாரணகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# புதிதாக பல நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை விரிவுபடுத்தவுள்ளது இலங்கை!



கொழும்பு, ஜூன் 29

வர்த்தக இராஜதந்திரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், பல நாடுகளுடன் புதிதாக இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவிருக்கிறோம் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மல்வத்த பீடத்தின் மகாநாயக்கரான, வண. திப்பொட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரரைத் கடந்த திங்கட்கிழமை சந்தித்து ஆசி பெற்ற போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சர்வதேச சமூகத்திடம் காணப்பட்ட இலங்கை தொடர்பான, எதிர்மறையான கருத்துக்களைத் தற்போதைய அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் மாற்றியமைத்திருக்கிறது.

சில தூதுவர்கள் நாட்டுக்கு சாதகமான பெயரை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் திறமையுடன் செயற்படவில்லை. தமது கடமைகளைச் சரியாகச் செய்யத் தவறிய பல தூதுவர்களை அரசு திருப்பி அழைக்கவுள்ளது.

தேவையில்லாத இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தூதரகங்கள் சிலவற்றை மூடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, வர்த்தக இராஜதந்திரத்தை விரிவுபடுத்தும் வகையில், பல நாடுகளுடன் புதிதாக இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.- என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஜனாதிபதியின் அதிகாரம் தொடர்பில் சர்ச்சை– பீரிஸ்!



கொழும்பு, ஜூன் 29

ஜனாதிபதியின் அதிகாரம் தொடர்பில் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொரளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உன்னத சட்டத்தின் அடிப்படையில் ஜனாதிபதிக்கு உண்டான அதிகாரங்களை அமைச்சர் ஒருவர் எதேச்சாதிகாரமாகக் கைப்பற்றிக் கொள்ள முடியுமாயின், ஜனாதிபதி பதவியின் நடைமுறை ரீதியான பெறுமதி என்ன?

லொத்தர் சபைகள் இரண்டு நிதி அமைச்சிலிருந்து பிரித்து வெளிவிவகார அமைச்சில் இணைக்கப்பட்டுள்ளன.

அரசமைப்பின் பிரகாரம் அமைச்சர்களுக்கும் நிறுவனங்களுக்கும் துறைகளை ஒதுக்கிக் கொடுக்கும் பணி ஜனாதிபதிக்கே உரியதாகும்.

வெளிவிவகார அமைச்சர் ஒருவருக்கு எவ்வாறு லொத்தர் சபையை வழங்க முடியும்?

* இந்தத் தீர்மானம் ஜனாதிபதியின் தேவைக்கு ஏற்ப எடுக்கப்பட்டது என்றால் அதனை எவரும் நம்ப மாட்டார்கள்,

ஜனாதிபதி இன்று கைப்பாவையாகவே செயற்படுகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய மருத்துவ அதிகாரிகள் சங்கம்!

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கு எதிராக அந்தச் சங்கத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி மருத்துவர்கள் புதிய சங்கம் ஒன்றை உருவாக்கத் தீர்மானித்துள்ளனர்.

இதன்மூலம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இரண்டாகப் பிளவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தற்போது கடுமையான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமையால், அந்த அரசியல் தலைவீடுகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டு புதிய தொழிற் சங்கம் ஒன்று உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஒரு தொகுதி மருத்துவர்கள் தற்போது பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாளுக்கு நாள் மக்களின் அதிருப்திக்கு உள்ளாகி வருகின்றது எனவும் இதனால் புதிய மருத்துவ அதிகாரிகள் சங்கமொன்றின் அவசியம் எழுந்துள்ளதாகவும் ஒரு தொகுதி மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மஹிந்தவுக்கு உதவத் தயாராகும் பாகிஸ்தான்!

கொழும்பு, ஜூன் 29

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தேவையான உதவிகளை வழங்க பாகிஸ்தான் தயாராக உள்ளது என பாகிஸ்தான் ஜனாதிபதி மம்னூன் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றிருந்தார்.

இதன்போது பாகிஸ்தான் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துடன், மஹிந்தவின் பாகிஸ்தான் விஜயத்தை இரத்துச் செய்யுமாறு இலங்கை அரச உயர்மட்டம் கோரிக்கை முன்வைத்தது என அந்நாட்டு அரச தரப்பு மஹிந்தவிடம் தெரிவித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜனநாயகச் செயற்பாடுகளாக போராட்டங்கள் அமைய வேண்டும்

## கல்வி இராஜாங்க அமைச்சர் கருத்து

போராட்டங்களை நடத்துவதும், கருத்துகளை வெளியிடுவதும் ஜனநாயக ரீதியான செயற்பாடுகளாக அமைய வேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டிய பல்கலைக்கழக மாணவர்கள் சுகாதார அமைச்சுக்குள் அத்துமீறி நுழைந்து பொதுச்சொத்துகளைச் சேதமாக்கிய சம்பவம் தொடர்பில் கண்டனத்தையும் அவர் தெரிவித்திருந்தார்.

நுவரெலியா - இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறான சம்பவம் மீண்டும் நாட்டில் இடம்பெறாத வகையில் ஆசிரியர்கள் மாணவர்களை வழி நடத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருந்தார். (எ)

## தினசரி ராசி பலன் 29.06.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 14 ஆம் நாள் ஷஷ்டித் திதி மாலை 5.53 வரை. பின்னர் ஸப்தமி. நட்சத்திரம்: பூரம் இரவு 7.23 மணி வரை. பின்னர் உத்தரம். சித்தயோகம் இரவு 7.23 வரை. பின்ன அகபயோகம். ராகுகாலம்: பகல் 1.48 முதல் 3.24 வரை. சுபநேரம் காலை 7.28 முதல் 8.58 வரை. இன்று ஷஷ்டி விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி. ஆனி மாத வளர்பிறை ஷஷ்டி. பிறந்த நட்சத்திர வழிபாடு: பூரம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** மேன்மையான நாள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் அந்நியோன்னியம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு அரச உதவிகள் எதிர்பார்த்தவண்ணம் அமையும்.

**ரிஷபம்:** கவலையான நாள். நண்பர்களால் தீமையும், பகைமையும் உண்டாகும். குடும்பத்தில் வெறுப்பும், சண்டையும் உண்டாகும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் வெறுப்புக்குள்ளாக வேண்டிவரும்.

**மிதுனம்:** மத்திம பலன்கள்காணப்படுகின்றன. உத்தியோகத்தர்களுக்கு சக உத்தியோகத்தர்களுடன் திடீர் வாக்கு வாதங்கள் உண்டாகும். பெண்களுக்கு நினைத்த காரியம் கைகூடாமற் போகும்.

**கடகம்:** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் லாபங்கள் கிட்டும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். விவசாயிகளுக்கு கமச்செய்கை விருத்தியடையும்.

**சிம்மம்:** உயர்வான நாள். உறவினருடன் நல்லுறவு வலுவடையும். வியாபாரம் முன்னேற்றமடையும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நன்மதிப்பும், பாராட்டுக்களும் கிடைக்கும்.

**கன்னி:** சலனம் மிகுந்த நாள். நிதி நிலைமை பாதிக்கப்படும். வியாபாரம் மந்த நிலையில் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு சக தொழிலாளரு டன் பிரச்சினைகள் ஏற்படும். தொழிலாளர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும்.

**துலாம்:** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். உத்தியோகத்தர்களுக்கு அரச புலமைப்பரிசில் கிடைத்து வெளிநாடு செல்லும் வாய்ப்புக்கள் உண்டாகும்.

**விருச்சிகம்:** மத்திய பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வியாபாரம் சுமாராக நடக்கும். பெண்களுக்கு விவாக வாய்ப்புக்கள் குறைவாக இருக்கும்.

**தனுசு:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. முதலீடுகளில் எதிர்பார்த்த இலாபம் கிட்டும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகள் ஆதரவையும், பதவி உயர்வையும் பெறுவார்கள்.

**மகரம்:** துன்பமான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் கருத்து மோதல்கள் உண்டாகும். தொழிலாளர்களுக்கு தொழில் பிணக்குகள் அதிகரிக்கும். மன அமைதியின்மை உண்டாகும்.

**கும்பம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. செலவுகளைச் சமாளிக்கவேண்டிவரும். நெருங்கிய உறவினர்களுக்குள் குடும்பத்தில் அமைதி குன்றும். வியாபாரம் மந்தகதியில் நடப்பதால் வருமானம் வீழ்ச்சியடையும்.

**மீனம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வியாபாரம் வளமாக நடைபெறும். விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை நல்ல பலனளிக்கும். தொழிலாளர்களுக்கு வேலை வாயப்புக்கள் அதிகரிக்கும்.

சந்திராட்டமநாள்: உத்தராடம், திருவோணம், அவிட்டம் 1,2, ஆம் கால்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் சுபகாரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# கிளிநொச்சியில் போரால் பாதித்த மாற்றுத்திறனாளிகள் 2,892 பேர்

கிளிநொச்சி மாவட்டத்தில், போரால் பாதிக்கப்பட்ட 2ஆயிரத்து 892 மாற்றுத் திறனாளிகள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் 283 பேர், பார்வை இழந்த நிலையில் உள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத் தகவல் தெரிவித்துள்ளது.

95 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டம், பல முறை இடப்பெயர்வுடன் கூடிய பொருளாதார இழப்புக்களைச் சந்தித்துள்ளது.

உறவுகளின் உயிரிழப்புக்களுடன், தங்கள் உடல் உறுப்புகளை இழந்த நிலையில், பல்வேறு வகையான பாதிப்புக்களையும், மன உளைச்சல்களையும் சுமந்தவாறு பலர் இன்று வாழ்ந்து வருகின்றனர்.

மாவட்டத்தில் உள்ள 4 பிரதேச செயலகப் பிரிவுகளில், தமது ஒரு கண்ணை இழந்த நிலையில் 240 பேரும், இரண்டு கண்களையும் இழந்த நிலையில் 43 பேரும் உள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலகப்பிரிவில் ஒருகண்ணை இழந்த நிலையில் 49 பேரும், இரண்டு கண்களையும் இழந்த நிலையில் 12 பேரும் என, மொத்தம் 61 பேர் உள்ளனர்.

பூநகரி பிரதேச செயலகப் பிரிவில், 40 பேர் தமது ஒரு கண்ணை இழந்த நிலையிலும், இரண்டு கண்களை இழந்த நிலையில் 13 பேரும் என மொத்தம் 53 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் தமது ஒரு கண்ணை இழந்த நிலையில் 42 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் 108 பேர் தமது ஒரு கண்ணை இழந்த நிலையிலும், 18 பேர் தமது இரண்டு கண்களையும் இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர் என்று மாவட்ட செயலகத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கரிடம் பண மோசடி; இலங்கைப் பெண் கைது!

அமெரிக்க முதியவர் ஒருவரிடம் பண மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட 58 வயதான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்கா - அலபாமாவில் உள்ள மொபைல் பிராந்தியத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அமெரிக்க ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த அமெரிக்கரின் வங்கிக் கணக்கிலிருந்து 3 லட்சத்து 10 ஆயிரம் என டொலர்களைக் களவாடினார் இலங்கை பெண் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

யலோலா சுரங்கனி மெக் கன்ட் என்ற அந்தப் பெண், அமெரிக்காவில் இயங்கும் 'அவர்ரைம்' என்ற சமூக வலைத்தளத்தின் ஊடாக, 90 வயதுடைய பிரஸ்தாப முதியவருடன் அறிமுகமாகி, மோசடியில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த முதியவரின் கணக்கில் இருந்து 3 லட்சத்து 10 ஆயிரம் டொலர்கள் மெக்கன்டின் கணக்குக்கு மாற்றப்பட்டதை அறிந்த புலனாய்வாளர்கள் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் கடந்த 2016 ஆம் ஆண்டு இவ்வாறு முதியவர் ஒருவரை ஏமாற்றி இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், அந்தப் பெண், அடுத்த மாதம் தமது குடும்பத்துடன் இலங்கை திரும்பத் திட்டமிட்டிருந்தார் என்று விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அனர்த்தத்தால் பாதித்த வியாபாரிகளுக்கு நிவாரணமும் வட்டியில்லாக் கடனும்



இரத்தினபுரி தேர்தல் தொகுதியில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறிய வியாபாரிகளுக்கு இரண்டு அல்லது மூன்று லட்சம் ரூபா வரை நிவாரண உதவியும், அதற்கு மேலதிகமான பாதிப்புகளுக்குள்ளான வர்த்தகர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வசதிகளையும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அனர்த்த நிவாரண மதிப்பீடு தொடர்பான கலந்துரையாடலிலேயே அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இரத்தினபுரி பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட 54 சமய ஸ்தலங்களுக்கு நிதி உதவியாக தலா ஒரு லட்சம் ரூபா வீதம் 54 லட்சம் ரூபா தொகை அடங்கிய காசோலைகளை அமைச்சர் ரிஷாத் உரிய மதகுருமார்களிடம் கையளித்தார். (எ)

# புதிய அரசமைப்புத் திருத்தம் இடைக்கால அறிக்கை ஓகஸ்டில்!



புதிய அரசமைப்புத் திருத்தம் தொடர்பான இடைக்கால அறிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற அரசமைப்புத் திருத்தம் தொடர்பான செயலமர்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் பௌத்த மதத்துக்கான முக்கியத்துவம் நீக்கப்படமாட்டாது. ஏனைய மதங்களின் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படும். இது தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் வெளியிடப்படவுள்ளது. இது இறுதி அறிக்கை அல்ல. அதன் மூலம் மக்களுக்குக் கருத்துத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

மக்களின் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் சட்டமூலத்தை தயாரிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்குவழங்கப்படவுள்ளது. -என்றார். (எ)

# புராதன ஓவியங்களை பாதுகாப்பதில் சிரமம்

தம்புள்ள, ரங்கிரி விகாரையிலுள்ள புராதன ஓவியங்கள் அழிவடைந்து வருகின்றன. அவற்றைப் பாதுகாப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக தொல்லியல் திணைக்கள இயக்குநர் பிரசாந்த மனதாவல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அரசின் பொறுப்பில் அல்லாது, தொல்லியல் திணைக்களத்துக்குக் கீழேயே, அந்த விகாரை பராமரிக்கப்பட்டு வருகின்றது.

எனவே, இந்த விகாரையிலுள்ள ஓவியங்களை பாதுகாக்கும் பொறுப்பு, தொல்லியல் திணைக்களத்துக்கே ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த விகாரையிலுள்ள ஓவியங்களைப் பாதுகாப்பதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். -என்றார். (எ)

# இலங்கையில் பிரசித்தி பெற்று விளங்கும்
# மாவைக் கந்தனின் பெரும் திருவிழா
## இன்று கோலாகலமாக ஆரம்பம்

(மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது. அதனை ஒட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது)



**முருகனே செந்தில் முதல்வனே மாயோன்**
**மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்**
**தம்பியே நின்னுடைய தண்டைக்கால்**
**எப்பொழுதும்**
**நம்பியே கைதொழுவேன் நான்.**

என்று போற்றப்படுகின்ற தமிழர்களின் பெருந் தெய்வமாகிய முருகப் பெருமான் பல்வேறு இடங்களிலும் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பதைக் காணமுடிகிறது.

இலங்கையிலே பிரசித்தி பெற்ற முருகப் பெருமான் வழிபாட்டுத் தலங்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயமும் ஒன்றாக மிளிர்கின்றது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வரலாற்றுப் பெருமையும் வழிபாட்டுப் பெருமையும் கொண்டது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற சிறப்புடையது.

யாழ்.குடாநாட்டிலுள்ள முப்பெரும் முருகனின் தலங்களுள் ஒன்றாக சிறப்புப் பெறும் வகையில் மாவைக் கந்தன் ஆலயம் அமைந்துள்ளது.வரலாற்றுப் பெருமைமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு செல்லும் பிரதான நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது.

மாவிட்டபுரம் திருத்தலத்துக்கு அருகே தையிட்டி, வீமன்காமம், வறுத்தலை விளான், கட்டுவன் , குரும்பசிட்டி , தெல்லிப்பழை , அளவெட்டி, கொல்லங்கலட்டி ,பன்னாலை, இளவாலை, கருகம்பானை, நகுலேஸ்வரம், மயிலிட்டி ஆகிய வலி .வடக்கின் முக்கிய கிராமங்கள் சூழ்ந்து உள்ளன.

மாவைக்கந்தன் ஆலயத்துக்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு. ஏழாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஆலயம் தோற்றம்பெற்றதாக சொல்லப்படுகிறது. ஓர் அற்புத நிகழ்வோடு இணைந்த வகையிலேயே ஆலயவரலாற்றின் ஆரம்பம் அமைந்திருப்பதையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

இந்தியாவின் சோழ நாட்டு மன்னனான திசையுக்கிர சோழன் மனைவியாகிய கனகாங்க என்பவள் குதிரை முகமுடைய பெண் பிள்ளையொன்றை பெற்றெடுத்தாள். மாருதப்புரவீகவல்லி என்ற பெயருடைய அந்த அரசகுமாரி குன்ம நோயால் பீடிக்கப்பட்டிருந்தாள். குன்மநோயும் குதிரைமுகமும் கொண்டவளாகிய திசையுக்கிர சோழனின் மகள் மாருதப்புரவீகவல்லி என்னும் அரசிளங்குமாரி சோழ நாட்டினின்றும் இங்கு வந்து தங்கி தீர்த்தமாடி சிவாலய தரிசனம் செய்யும் நியமம் பூண்டு அதன் பயனாய் நோயும் நீங்கி, குதிரைமுகம் மாறப் பெற்றாள் என்பது வரலாறு.

அவள் தங்கியிருந்த இடம் 'குமாரத்தி பள்ளம்' என இன்றும் வழங்கப்படுகின்றது. எவ்விடத்தில் அவள் குதிரை முகம் நீங்கியதோ அவ்விடம் இன்று மாவிட்டபுரம் என அழைக்கப்படுகின்றது.

அவள் சோழநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து கீரிமலையிலுள்ள 'கண்டகி' தீர்த்தக் கேணியில் நீராடிவிட்டு வரும் வழியில் அவளது குதிரை முகம் மாறி அழகுத் தோற்றத்தைப் பெற்றதாகவும் அந்த இடமே மாவிட்டபுரம் (மா - குதிரை , விட்ட - நீங்கிய , புரம் - நகரம்) என அழைக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

தனது குதிரை முகம் நீங்கியமையால் மகிழ்ச்சியடைந்த அரசகுமாரி அவ்விடத்தில் முருகனுக்கு ஓர் ஆலயம் அமைக்க வேண்டும் என்ற விருப்பத்தை தெரிவிக்கவே திசையுக்கிர சோழ மன்னனும் அங்கிருந்து ஆலயம் அமைப்பதற்கு வேண்டிய பொருள்களுடன் ஆலய விக்கிரகங்கள் , தொழிலாளர்கள், சிதம்பரத்தைச் சேர்ந்த அந்தணப் பெரியார்களையும் அனுப்பி வைத்து சிவாகம முறைப்படி பெரும் இராஜகோபுரத்துடன் ஆலயத்தை நிர்மாணித்தான்என்பது ஆலய வரலாறாகும்.

ஆலயம் சிவாகம முறைப்படி அமைக்கப்பெற்றது. இது கி.பி. 789 ஆம் ஆண்டிலே நடைபெற்றது.

ஆலயத்தே நித்திய பூசைகளும் வெள்ளிக்கிழமை , கார்த்திகை நட்சத்திரம் பொருந்திய நாள் ஆகிய காலங்களில் விசேட பூசைகளும் வருடந்தோறும் ஆடி அமாவாசையன்று 25ஆம் திருவிழாவாகிய தீர்த்தத்திருவிழா அமைய 25திருவிழாக்களும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

மாவைக் கந்தனின் வருடாந்த மகோற்சவம் ஆடி அமாவாசை தினத்தை தீர்த்தமாகக் கொண்டு ஆரம்பமாவது வழக்கம். இருபத்தைந்து நாள்கள் மகோற்சவம் மிகச் சிறப்பாக பக்தி சிரத்தையுடன் சிவாகம முறைப்படி பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் புடை சூழ இடம்பெறும். மாருதப்புரவீகவல்லி தீர்த்தமாடி அருள்பெற்ற கீரிமலை கண்டகி எனப்படும் புனித தீர்த்த நிலையிலே மாவைக் கந்தனும் ஆடி அமாவாசையன்று தீர்த்தோற்சவத்தில் தீர்த்தமாடி தன்னை நாடிவரும் அடியவர்களின் வினையை போக்கியருளுகின்றான்

இவ் வருடம் ஆலய மகோற்சவம் இன்று (29.06.2017) வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 23.07.2017 ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசை தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

விசேட உற்சவங்களாக எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை திருக்கார்த்திகை உற்சவமும் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. ஆடி அமாவாசை தீர்த்த உற்சவத்தன்று காலை 3.30 மணிக்கு உஷாக்காலைப் பூசை, 4 மணிக்கு அபிசேகம், 4.30 மணிக்கு காலைச்சந்திப் பூசை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை 5.30 மணிக்கு சுவாமி தீர்த்தத்திற்குப் புறப்பாடு, 6.30 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தமாடுதல், மாலை 6 மணிக்கு கீரிமலையில் இருந்து புறப்பாடு, 8.30 மணிக்கு சாயரட்சைப் பூசை, திருவருட் பிரசாதம் வழங்குதல் என்பன இடம்பெறவுள்ளது.

மாவைக்கந்தன் மேல் ஏராளமான பக்தி நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் சுன்னாகம் முத்துக்குமார கவிராயரின் மாவைச் சுப்பிரமணியர் தோத்திரம், இருபாலை சேனாதிராச கவிராயரின் மாவைப் பதிகம், மாவை ஊஞ்சல், சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவரின் மாவைப் பதிகம், மாவை இரட்டை மணிமாலை, மாவைக் கலிவெண்பா நல்லூர் சரவணமுத்துப் புலவரின் மாவை ஊஞ்சற் பாடல் , சபாபதி நாவலரின் மாவை அந்தாதி , தெல்லிப்பழை பொன்னம் பலப் பிள்ளையின் மாவையமக அந்தாதி, மாவை திருவிரட்டை மணி மாலை, ஆறெழுத்துப் பத்து ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

கலியுகக் கந்தனாக மாவையம் பதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற முருகப் பெருமானை வழிபாடு செய்து இன்மை மறுமைப் பயன்களை பெற்று உய்வோமாக

**சைவப்புலவர் எஸ்.ரி.குமரன்**
செயலாளர் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.

இந்தியாவின் சோழ நாட்டு மன்னனான திசையுக்கிர சோழன் மனைவியாகிய கனகாங்க என்பவள் குதிரை முகமுடைய பெண் பிள்ளையொன்றை பெற்றெடுத்தாள். மாருதப்புரவீகவல்லி என்ற பெயருடைய அந்த அரசகுமாரி குன்ம நோயால் பீடிக்கப்பட்டிருந்தாள். குன்மநோயும் குதிரைமுகமும் கொண்டவளாகிய திசையுக்கிர சோழனின் மகள் மாருதப்புரவீகவல்லி என்னும் அரசிளங்குமாரி சோழ நாட்டினின்றும் இங்கு வந்து தங்கி தீர்த்தமாடி சிவாலய தரிசனம் செய்யும் நியமம் பூண்டு அதன் பயனாய் நோயும் நீங்கி , குதிரைமுகம் மாறப் பெற்றாள் என்பது வரலாறு.






வொன்.வேணு கிருஷ்ணா

வெளியுறவு அமைச்சர் பிஷப் வேறுபாடுகளை குறைத்துக்காட்ட முனைந்தார். ஆஸ்திரேலியா எப்போதுமே அதன் தேசிய நலன்களையே கணக்கில் எடுத்துக் கொண்ட நிலையில், அவர் பின்வருமாறு கூறினார்: ''நாங்கள் பகிர்ந்துகொள்ளும் மதிப்புக்களையும், பகிர்ந்துகொள்ளும் நலன்களையும் கொண்டுள்ளோம் மேலும், விதிகள் அடிப்படையிலான உத்தரவை ஆதரிப்பதில் நாங்கள் நிச்சயமாக முற்றுமுழுதாக அமெரிக்காவுடன் இணைந்திருக்கிறோம், என்பதுடன் பாதுகாப்பு மற்றும் நடவடிக்கைகளில் ஆஸ்திரேலியா ஈடுபடவேண்டும் என்ற நிலை ஏற்படுகின்றபோது, ஆஸ்திரேலியா அதற்கேற்ப செயலாற்றியே



ஆகவேண்டுமென நாங்கள் எங்களது சொந்த சிந்தனையை தயார்ப்படுத்தி வைத்துள்ளோம். அது நடக்கும்போது, அமெரிக்காவும், ஆஸ் திரேலியாவும் இதேபோன்ற கருத்துக்களையே பகிர்ந்து கொள்கின்றன''.

ஆஸ்திரேலியாவிற்கு மட்டுமல்லாமல், ஆசிய பசிபிக் பிராந்தியத்திற்கும் வொஷிங்டனின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார். ''அதனால்தான் நாங்கள் இங்கே இருக்கிறோம். அதனால்தான் இந்த பிராந்தியத்திற்கு நாங்கள் பயணம் செய்தோம், மேலும் அதனால்தான் நாங்கள் எங்களது சமதரப்பினரையும் இதில் ஈடுபடுத்தியுள்ளோம்'', என்று அவர் தெரிவித்தார். ட்ரம்ப் நிர்வாகம், கிழக்கு ஆசிய மாநாடு (East Asia Conference) மற்றும் ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (Asis Pacific Economic Cooperation - APEC) மாநாடு போன்ற வகையிலான பிராந்திய கூட்டங்களில் ''மிகத் தீவிரமாக'' செயலாற்ற முனைந்ததாக மேலும் அவர் சேர்த்துக் கூறினார்.

லண்டன் பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து, ட்ரம்ப் நிர்வாகத்தினால் முடுக்கிவிடப்பட்டு, சிரியா, ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடக்கின்ற அமெரிக்கத் தலைமையிலான போர்களை நியாயப்படுத்துவதற்காக ''பயங்கரவாதத்தின் மீதான போர்'' என்ற சாக்குப்போக்கை ஆஸ்திரேலிய மற்றும் அமெரிக்க அதிகாரிகள் மீண்டும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். ''அடிக்கடி அப்பாவிப் பொது மக்கள் மீது கொடூரமான தாக்குதல்களுக்கு வழி வகுக் கின்ற பயங்கரவாதத்தையும், விஷத் தன்மையுடைய சித்தாந்தத்தையும் எதிர்த்துப் போராட நாங்கள் எடுத்த தீரமானத்தில் உறுதியான நோக்கம் கொண்டிருக்கிறோம்'' என்று பிஷப் அறிவித்தார். அதே சமயம் அண்மையில் ஆஸ்திரேலிய இராணுவம் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கு மற்றொரு 30 துருப்புக்களை அனுப்ப உறுதியளித்தது.

அமெரிக்கக் கடற்படை, கடற்படை கப்பல்கள் மற்றும் போர்கப்பல்கள் ஆகியவற்றின் ஆஸ்திரேலிய தளங்கள் மீதான பயன்பாட்டை எப்பொழுதும் விரிவுபடுத்துகின்ற வகையில், அமெரிக்க, ஆஸ்திரேலிய இராணுவத்தினர் ஏற்கனவே ஆழமாக ஒருங்கிணைந்துள்ளனர். மத்திய ஆஸ்திரேலியாவில் பைன் காப்பில் உள்ள கூட்டு உளவுத் துறை வசதி உள்ளிட்ட ஒற்றர் மற்றும் தகவல்தொடர்புத் தளங்கள், மத்திய கிழக்கிலிருந்து கிழக்கு ஆசியா வரையிலுமான ஒரு பெரிய பரந்த பிரதேசத்தின் மீது யுத்தத்தை முன்னெடுப்பதற்கான அமெரிக்க இராணுவத்தின் இயலுமைக்கு இன்றியமையாதவையாக உள்ளன.

AUSMIN பேச்சுவார்த்தையின் போது, புதிய இராணுவ அடிப்படையிலானஏற்பாடுகள் அல்லது ஆஸ்திரேலிய இராணுவப் பயன்படுத்தல்கள் குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றாலும், ''எங்களது ஆயுதப்படைகளின் உட்புற இயங்குதன்மையை இன்னும் வலுப்படுத்தும் கூட்டு உறுதிப்பாட்டையும், மேலும் திறன் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்பம் குறித்த நெருக்கமான ஒத்துழைப்பு, அத்துடன் ஏற்கனவே இருக்கும்'' அடிப்படை ஒப்பந்தங்களின் ''முழுமையான செயற்பாடு'' ஆகியவற்றை தொடர்வதையும் இந்த அறிக்கை வலியுறுத்தியது.

**ஐ.நா.வின் புதிய பொருளாதார தடைகளும் தொடரும் வட கொரிய ஏவுகணைச் சோதனைகளும்**


அமெரிக்காவும், ஐ.நா.வும் மேலதிக பொருளாதார தடைகளை விதித்தமை தொடர்பாக, வட கொரியா தங்கள் மீதான தண்டனை நடவடிக்கைகளுக்கு எதிராக கண்டனம் தெரிவித்தும், மற்றொரு சுற்று ஏவுகணைச் சோதனைகளை நடத்தியும் அதற்கு தனது எதிர்வினையை காட்டியுள்ளது.

தென் கொரிய இராணுவத்தை பொறுத்தவரையில், நாட்டின் கிழக்கு கடற்கரையிலிருந்து, பியோங்யாங் ''தரையிலிருந்து கப்பலை தாக்கும் ஏவுகணைகளாக இருக்கக்கூடிய அடையாளம் தெரியாத பன்மடங்கு வெடி பொருள்களை ஏவியதாக அறிவித்தது. சமீபத்திய வாரங்களில் ஒரு முடுக்கி விடப்பட்ட தொடர் ஏவுகணைச் சோதனைகளாக சமீபத்திய ஏவுகணைச் சோதனைகள் இருந்தன''.

இந்த ஏவுகணைச் சோதனைகள் வட கொரிய மக்களை பாதுகாப்பதற்கு மாறாக, இந்த பிராந்தியத்தில் அமெரிக்காவிற்கும் மற்றும் அதன் நட்பு நாடுகளினதும் இராணுவ விரிவாக்கத்திற்கும் மற்றும் பியோங்யாங்கிற்கு எதிராக மீண்டும் மீண்டும் யுத்த அச்சுறுத்தல்களை விடுப்பதற்கும் ஒரு சாக்குப்போக்காகவும் அமைகின்றது. ஏப்ரல் மாதம் அணுசக்தி வழிகாட்டி ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பலான USS Michigan இன் மூலமாக வந்த ஒரு துறைமுக அழைப்பைத் தொடர்ந்து, ஒரு அமெரிக்க அணுஆயுத சக்தி கொண்ட தாக்குதல் நீர்மூழ்கிக் கப்ப லான USS Cheyenne, தென் கொரிய துறைமுகம் பூசனில் நிலை கொண்டுள்ளது. இவ்விரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களுமே Tomahawk கடல்மூல ஏவுகணைகளை ஏவும் திறன் படைத்தவையாகும்.

**USS கார்ல் வின்சன், USS ரொனால்ட் ரீகன் மற்றும் USS நிமிட்ஸூம்**

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் armada என்று விவரித்த போர்க் கப்பல்களின் தொகுப்பு ஒன்றை கொரிய தீபகற்பத்தில் அமெரிக்கக் கடற்படை கட்டி எழுப்புகிறது. USS கார்ல் வின்சன் மற்றும் USS ரொனால்ட் ரீகன் போன்ற இரண்டு விமானந்தாங்கி கப்பல்கள் அவற்றின் அழிப்புக்கப்பல் மற்றும் கடல்மூல ஏவுகணை கப்பல்களின் தாக்குதல் குழுக்களுடன் சேர்ந்து ஏற்கனவே இந்த பிராந்தியத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளதுடன், ஜப்பானிய கடற்படை கப்பல்களுடன் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். மற்றொரு விமானந்தாங்கி கப்பலான, USS நிமிட்ஸூம் அதன் தாக்குதல் குழுவும் இந்த பிராந்தியத்தில் ஒரு முன்னோடியில்லாத அமெரிக்கக் கடற்படை பிரசன்னத்தை உருவாக்க வழிவகுக்கின்றன.




நிறைவேற்றப்பட்ட பாதுகாப்புச்சபையின் தீர்மானத்தில் இணைந்திருந்த கூடுதல் ஐ.நா. பொருளாதாரத் தடைகளை ஒத்துக் கொள்ள செய்வதற்கு சீனாவிற்கும், ரஷ்யாவிற்கும் அமெரிக்கா இறுதியாக அழுத்தம் கொடுத்தது. கொரியோ வங்கி மற்றும் மூலோபாய ரொக்கெட் படை, அத்துடன் 14 தனி நபர்கள் உட்பட, மற்ற நான்கு வட கொரிய நிறுவனங்களுக்குப் பொருந்துவதாக, ஒரு உலகளாவிய பயணத் தடை மற்றும் வெளிநாட்டுச் சொத்துக் குவிப்பை முடக்குவது போன்ற இந்தப் புதிய அபராதங்கள் வரம்பிற்குட்பட்ட நோக் கத்துடன்இருந்தன. புதிய நடவடிக்கை களுக்கு ஒரு பொது பாதுகாப்புச் சபையின் வாக்குகளை பெறுவது தேவையில்லை என்றாலும், வட கொரியா மீதான அழுத்தத்தை தீவிரப் படுத்த வாக்கெடுப்பிற்கு வொஷிங்டன் வலியுறுத்தியது.



(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.


விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்தூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



18



அத்தியாயம் - II


## இந்தியா பற்றிய எனது முதல் மனப்பதிவுகள்

செல்வம் கொழிக்கும் மேற்குலகில் வளர்ந்தவள் நான். கோடிக்கணக்கான மக்களின் வறிய வாழ்க்கைத் தரத்தை நான் இந்தியாவில் பார்த்தபோது திகைத்துப் போனதுக்கு அதுவும் காரணமாக இருக்கலாம். வறுமை, சமூகச் சுரண்டல், அநீதி, முரண்பாடுகள் இவை எல்லாம் அப்பட்டமாகத் தெரிந்தன. இவை மட்டில் பாராமுகமாகவோ இவற்றால் மனம் நெகிழாமலோ ஒருவர் இருப்பாரேயென்றால் அவர் பார்வை அற்றவராகத் தான் இருக்க முடியும். எதிரே தெரிந்த வறுமையும் சுரண்டலும் எனக்குள் ஏற்படுத்திய கடுப்பு, காலத்தால் தணியவே இல்லை. தொடக்கத்தில், நிலைமையை நேரே பார்க்கும் போதெல்லாம் இது நிஜமல்ல, மாறி விடும் என்று கருதுவேன். ஆனால், இது மாறவில்லை; நிரந்தர பிரசன்னமாக இருந்தது; மனச்சாட்சியை உறுத்தியது; மனதையும் குடைந்தது. விமானம் மூலம் மும்பையில் போய் இறங்குவதற்கு முன், விமான ஜன்னலால் வெளியே எட்டிப் பார்த்தால் எல்லாமே புரிந்து விடும். விண்முட்டும் மாடங்களின் கவர்ச்சியை, நகரின் எல்லையில் கண்ணுக்கு எட்டாத் தூரத்துக்கு விரிந்து கிடக்கும் சேரிகள் மழுங்கடித்துவிடும். விமான கூடத்தை விட்டு வெளியே வந்ததும் பிச்சைக்காக நீளும் பெருந்தொகைக் கரங்களே பயணிகளை வரவேற்கும்.

எனது மனச்சாட்சியில் சுருக்கென்று தைத்த இன்னொரு சம்பவம், 'சென்னையில் ஒரு சாதாரண உணவு விடுதியில் நிகழ்ந்தது. நாம் உணவைச் சுவைத்துக் கொண்டிருந்தோம். அந்த உணவு விடுதியின் வாயிலை மூன்று நான்கு பிள்ளைகள் துணிச்சலாக அகலத் திறந்தார்கள். அவர்களுடைய வாடிய முகங்கள் நாம் உண்பதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. நாம் தமக்காக உணவில் ஏதாவது மீதம் விடமாட்டோமா என்ற ஏக்கம் அந்த முகங்களில் தெரிந்தது.

என்னைப் பாதித்த இன்னொன்று, சென்னைப் பிச்சைக்காரரின் பரிதாப நிலை; என்றுமே மாறாத நிலை; எங்கும் வியாபித்து இருந்த சமூக ஏற்றத் தாழ்வுகளையும் சுரண்டலையும் பிரதிபலித்த நிலை; நான் ஒரு வெள்ளைக்காரி என்பதால் பிச்சைக்கார சமுதாயத்தின் இரத்தலுக்கு கூடுதலாக உள்ளானேன். ஆகவே, எனக்குப் பின்னால் ஒரு பிச்சைக்கார பட்டாளமே வந்து கொண்டிருக்கும்; அதுவும் சென்னை பிரதான வீதிகளில் நான் கடைத் தெருக்களுக்கு ஏதாவது வாங்கப் போனால் நீட்டிய கரங்களோடு "அம்மா! அம்மா!" என்று கெஞ்சியபடியே வந்து கொண்டிருக்கும். மனிதராகப் பிறந்தவர்கள் என் முன்னே நின்று பிச்சைக்காக என்னிடம் கையேந்துவது எனக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. இதில் இருந்து மீள்வதற்கும் எனக்கு நாள் பிடித்தது; இதை எப்படித் தீர்ப்பது என்பதும் கவலையைத் தந்தது. தொடக்கத்தில் இவ்வளவு அசுத்தமான தோற்றத்தில் பிச்சைக்காரர் என்னைத் தொந்தரவு செய்தமை எனக்கு ஓர் அசௌகரிய உணர்வை ஏற்படுத்தியது. இத்தகைய கொடிய வறுமையை நான் முகமுகமாக இதுவரை பார்த்ததில்லை. இனி, நான் மேற்குலகில் இருந்து வந்தவள். ஆதலால் என்னிடம் பணம் இருக்கும் என்று பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள் என்று நான் கருதினேன். இந்த நிலையில், ஒன்றிரண்டு சில்லறையைக் கொடுக்க மறுத்தால், மற்றவர்கள் கருமியாக என்னைப் பார்ப்பார்கள். அதை நான் விரும்பவில்லை. மறுபுறம் உண்மையான நிலையை உணராது இரக்கம் காட்டும் ஒருவராக மற்றவர்களால் கருதப்படுவதையும் நான் விரும்பவில்லை. பெரும்பாலான சமூகம் அங்கீகரிக்காத தொழில் இரத்தல் தொழில் என்பதை நான் அறிவேன். நாம் உதவுவதாகக் கருதிச் சில்லறை கொடுக்கும் அதே மக்களைச் சுரண்டி நசுக்கும் தொழில் இது என்பது எனக்குத் தெரியும்.

என்னைப் பொறுத்தவரையிலே பிச்சை எடுத்தலை ஒழித்துக் கட்டும் சமூகப் பணியில் ஈடுபடுவது எனது நோக்கம் அல்ல. நான் வீதியில் இறங்கி நடக்கும்போது, பிச்சைக்காரரால் மொய்க்கப்படாதிருக்க விரும்பினேன். அதேசமயம், எதையும் கொடுக்காது அவர்களை விரட்டவும் நான் விரும்பவில்லை. தொடக்கத்தில் நான் எல்லோ



ருக்கும் முடிந்ததைக் கொடுப்பேன். கொடுத்தால் அவர்கள் போய் விடுவார்கள் என்று கருதினேன். ஆனால், விளைவு நேர்மாறாக இருந்தது. எனது இளகிய மனதைக் கண்டு பிச்சைக்காரர் கூட்டம் பலமடங்கு பெருகியது. இந்த நிலையில், மாநில அரசு விரும்புவது போல, பிச்சை போடாது விடுவதே சிறந்தது என்று தீர்மானித்தேன். ஆனால், அதுவும் முடியாது போய்விட்டது. நான் கொடுக்கும் வரை அவர்களும் விடாது தொடர்ந்தார்கள். இந்தக் குழப்பமான சூழ்நிலையை எப்படிச் சமாளிப்பது? பிச்சைக்காரரால் சூழப்பட்டு விடுவேன் என்பதற்காக கடைத் தெருவுக்கும் போகாமல் இருக்க முடியவில்லை. அதே சமயம் அலையலையாகப் பெருகிக் கொண்டிருக்கும் அத்தனை பேருக்கும் சில்லறை கொடுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

இந்த வெளிப்படையான பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்று ஆழமாகச் சிந்தித்தேன். என்னை மலைக்க வைத்தது என்னைச் சூழ்ந்து கொள்ளும் பிச்சைக்காரரல்லர். மாறாக அவர்களது பிரசன்னம் ஓர் உண்மையை எனக்கு எடுத்துக் காட்டியது. அதிஷ்டவசமாக, சமூக சலுகையுடனும், நல்வாய்ப்புகளுடன் எனது வாழ்க்கை அமைந்து விட்டது. அதே சமயம், எனது முகத்துக்கு முன்னே அநீதியும் சமூக சமத்துவமின்மையும் மெய்யுண்மையாக வடிவம் எடுத்து நிற்கின்றன. இந்த முரண்பாட்டை உணர்ந்து நிலைகுலைந்து போனேன். ஆகவே, இந்தப் பிள்ளைகள், பெண்கள், ஊனமுற்றோர், வயது குறைந்தவர்கள் முதியோர் அடங்கிய இச் சமூகம் எனக்குத் தொந்தரவு தருகிறது என எண்ணி, அவர்களை ஒதுக்கித்தள்ளாது, பிரச்சினையை எனக்குள்ளேயே தீர்த்துவிடத் தீர்மானித்தேன். பிச்சை எடுப்பது ஒரு தொழிலாகவே மாறி விட்டிருந்தது. இதை ஊக்கப்படுத்தக் கூடாது என்று மாநில அரசு விரும்பியது. ஆனால், அதில் ஈடுபட்ட மக்களுக்கு மாற்று வழி இல்லாமல் இருக்கலாம்; இழிதொழிலே தங்களுக்கும் பொருத்தமானது என்று அவர்கள் கருதியிருக்க வேண்டும். இவர்களுக்குச் சில்லறை கொடுப்பதால் நான் குறைந்து போய் விடமாட்டேன். ஆகவே, எனக்குள் ஒரு முடிவுக்கு வந்தேன். சில்லறையை அவர்களுக்குக் கொடுத்த பின், கொச்சைத் தமிழில் 'போயிடுங்க' என்று கூறுவேன். அவர்களும் மரியாதையாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு, அமைதியாகப் போய்விடுவார்கள். அதன் பின் வெளியே போகும் போதெல்லாம் ஐந்து பைசா நாணயங்கள் நிறைய எடுத்துக் கொண்டு போவேன். பிச்சைக்காரர்கள் அருகே வந்ததும் சில, நாணயங்களைக் கொடுத்து, 'போயிடுங்க' என்று சொல்வேன். அவர்களும் போய்விடுவார்கள். சில ஆண்டுகளில் பிச்சைக்காரர் சமுதாயம் எனக்கு நன்கு பரீட்சயம் ஆகிவிட்டது. பிச்சைக்காரர்கள் ஒருவர் எதிரே வந்தால் அல்லது பின்னே தொடர்ந்து வந்தால் அவரைத் தவிர்த்து ஒதுங்க முயல மாட்டேன். உப்பிய வயிற்றோடு காணப்படும் குழந்தை அல்லது பெண்பிள்ளை தான் இந்தியாவின் வறுமையையும் ஒடுக்குமுறையையும் எனக்கு எந்த நேரமும் உணர்த்திக் காட்டும் குறியீட்டுச் சின்னங்களாக விளங்கின. எலும்பும் தோலுமாக கை, கால், குழி விழுந்த கண்கள், வெறித்த பார்வை கலைந்த, சிக்கேறிச் செம்பட்டை பற்றிய கருங்கூந்தல் – இப்படியான கோலம். அந்தக் குழந்தை எலும்பு துருத்திக் கொண்டிருக்கும் தாயின் இடுப்பில் ஒட்டிக் கொண்டிருக்கும் காட்சி எனது நெஞ்சைப் பதற வைக்கும். பெண்கள் பிச்சை எடுக்கலாமா இல்லையா என்பதல்ல பிரச்சினை. அந்த சின்னப் பெண் குழந்தையின் பரிதாப நிலையே தான் பிரச்சினை. மகப் பேற்றில் ஆண் பிள்ளையை விரும்புவதும் பெண்களுக்குச் சமூக நீதிப் புறக்கணிப்பு இழைப்பதும் இந்தியாவில் ஒரு பொது நியதி. உணவு ஊட்டும் போது கூட, ஆண் குழந்தைக்கு ஊட்டுவதற்காகப் பெண் சிசுவை புறக்கணிப்பதும், இனி ஊட்டச்சத்தில்லாத பெண் குழந்தையைப் பிச்சை எடுக்கும் வேலையில் வைத்திருப்பதால் அனுபவத்தைப் பெற முடியும் என்ற எதிர்பார்ப்பில் அதை மேலும் வாட்டுவதைக் கூட காண முடிகின்றது.

(தொடரும்...)





யாழ். நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் யாழ். இந்தியத் துணைத் தூதரக துணைத் தூதுவர் ஏ.நடராஜன் தலைமையில் யோகா தினம் நினைவு அனுஷ்டிக்கப்பட்டது.

யோகா செயல் முறைகளை யோகா வல்லுநர்கள் காண்பித்தனர். (எ-19)





யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளையும் யாழ். அறிவுத் திருக்கோவிலும் இணைந்து நடத்திய சர்வதேச யோகாதின நிகழ்வுகள் அறிவுத்திருக்கோவில் பிரதான மண்டபத்தில் நடைபெற்றன.



வட மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தனது பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து மன்னார் ஜிம்ரோன் நகர், எமில் நகரைச் சேர்ந்த கைம்பெண் ஒருவருக்கு பாடசாலை செல்லுதல் மற்றும் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்வதற்கு உதவியாக அவர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு சைக்கிள் ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டத்தில் உள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் வைத்து வழங்கினார்.

# புலிகளின் மிதிவெடிகளின் தயாரிப்பை கண்டு ஆச்சரியமடைந்த அமெரிக்கா!



விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட மிதிவெடி மற்றும் கிளைமோர் குண்டுகள் உள்ளிட்ட பல ஆயுதங்கள் தயாரிக்கப்பட்ட விதம் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் ஆச்சரியம் வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக ஜொனி மிதிவெடி மற்றும் பல ஆயுதங்களில் விடுதலைப்புலிகள் பயன்படுத்தியுள்ள தொழில்நுட்பங்கள் வியப்பளிக்கின்றன என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் உள்ளிட்ட வெளிநாட்டு பிரதிநிதிகள் வியப்படைந்துள்ளனர்.

வெடிபொருள் அபாயமற்ற மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரகடனப் படுத்தும் நிகழ்வு அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்றது அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த பல மிதிவெடிகள் அகற்றப்பட்டு அவை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

அந்தக் குண்டுகளையும், ஆயுதங்களையும் பார்வையிட்ட அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷாப் உள்ளிட்ட கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இராணுவதரப்பில் விளக்கமளிக்கப்பட்டது. அதனை தெரிந்து கொண்டதன் பின்னரே அவர்கள் ஆச்சரியத்தை வெளியிட்டுள்ளனர். (எ)

# அரசியல் விஞ்ஞான கற்கை நெறிக்கு சகல அரசியல் கட்சிகளுக்கும் வாய்ப்பு

## இளைஞர் முன்னணியின் தலைவர் பண்டார தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் விஞ்ஞான கற்கை பீடத்திற்கு இரண்டாவது குழு விரைவில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது.

எந்த அரசியல் கட்சி அங்கத்தவர்களுக்கும் இந்தக் கற்கைநெறிகளை தொடர்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுதொடர்பில் அந்தக் கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை பதிவாளர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசியல் விஞ்ஞான கற்கைநெறி பீடம் , ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகம் , டார்லி ரோட் கொழும்பு 10 என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கமுடியும்.

ஒழுக்கத்தை மதிக்கும் அரசியல் அனுபவமிக்க இளைஞர்களை உருவாக்குவது இந்த பீடத்தின் நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் டெங்கு நோயை ஒழிப்பதற்காக எதிர்வரும் சனிக்கிழமை முதல் பாடசாலை மற்றும் பொது இடங்களைத் துப்புரவு செய்யும் பணிகள் இளைஞர் முன்னணியால் ஆரம்பிக்கப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இளைஞர் முன்னணியின் முதலாவது வழிகாட்டல் நிறுவனம் கண்டியில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்படும். -என்றார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் கடும் வறட்சி; குடிதண்ணீருக்கு மக்கள் திண்டாட்டம்!



கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சி காரணமாக பூநகரி, கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் பெருமளவான பகுதிகளில் தற்போது குடிதண்ணீர் பிரச்சினை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள சுமார் 12 கிராம அலுவலர் பிரிவுகளும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள தட்டுவென்கொட்டி, ஆனையிறவு, கல்லாறு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் வருடம் முழுவதும் குடிதண்ணீர் விநியோகிக்கவேண்டிய நிலை காணப்படுகிறது என்று பிரதேச செயலக மற்றும் பிரதேச சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்கள் தெரிவிக்கையில்:-

வழமைக்கு மாறாக வறட்சி வாட்டுவதால் மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் குடிதண்ணீருக்கான நெருக்கடி, கால்நடைகளுக்கான குடிதண்ணீர் நெருக்கடி, காட்டு விலங்குகளுக்கான குடிதண்ணீர் இன்மை என்பன பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

கடந்த 2014ஆம் ஆண்டு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற வறட்சி தொடர்பான கலந்துரையாடல்களில் நீர் நிலைகளை உருவாக்குதல், சேணிகளை அமைத்தல் போன்ற திட்டங்கள் முன்மொழியப்பட்டு கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இதனைவிட, கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியமர்வின் பின்னர் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய விதத்தில் குடிதண்ணீர் விநியோகத்திட்டங்கள் டல மத்திய மாகாண அரசுகளால் முன்மொழியப்பட்டு போதிலும், அபிவிருத்தித் திட்டங்கள் ஏழு ஆண்டுகளாகியும் இன்னமும் நிறைவுபெறவில்லை.

மாவட்டத்தில் அதிக தண்ணீரைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இயக்கச்சிப் பகுதியில் உள்ள கிணறு இன்னமும் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து விடுவிக்கப்படாத நிலையிலும் பூநகரி பகுதியில் தண்ணீர் பெற்றுக்கொள்ளும் இடங்களில் அளவுக்கதிகமான தண்ணீர்ப் படையினர் பெறுவதனால் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பிரதேச சபைகளின் வருமானங்களை விட அதிக செலவு குடிதண்ணீர் விநியோகத்துக்கு செலவிட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் குடிதண்ணீருக்கான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய தரப்புக்கள் விரைவாக நடவடிக்கை எடுத்து நிலையான குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பல்கேரியாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த இலங்கையர்கள் 32 பேர் நாடு கடத்தல்

கொழும்பு, ஜூன் 29

பல்கேரியாவில் சட்ட விரோதமான முறையில் தங்கியிருந்த இலங்கையர்கள் 32பேர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பல்கேரிய விசேட விமானம் ஒன்றின் மூலம் நேற்று அந்த இலங்கையர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தாலிக்கு அழைத்துச் செல்வோம் எனக் கூறி சட்ட விரோத ஆள்கடத்தல்காரர்கள் இவர்களை துருக்கியில் நிர்க்கதியாக்கிச் சென்றுள்ளனர்.

அந்த இலங்கையர்கள் இத்தாலி செல்லும் எண்ணத்தில் துருக்கியிலிருந்து பல்கேரியாவுக்கு தப்பிச் சென் றுள்ளனர்.



இலங்கையர்கள் எப்போது இவ்வாறு பல் கேரியாவுக்குள் பிரவேசித்தனர் என்பது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை.

அந்த இலங்கையர்களின் பாதுகாப்புக்காக குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் 38 பேரும் விசேட விமானத்தில் பயணித்திருந்தனர் என்பது தெரியவந்துள்ளது.

நாடு கடத்தப்பட்டவர்களிடம் அரச புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர்.

அதன் பின்னர் நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் குற்ற விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்படுகின்றது. (எ)

## ரயில் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

காலி – மாத்தறைக்கு இடையில் நேற்று ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கண்டி – மாத்தறை வரை பயணித்த ரயிலில் மோதிப் படுகாயமடைந்த நிலையில், கராப்பிட்டிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் உயிரிழந்து விட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, சம்பவத்தில் உயிரிழந்தவர் காலி - கொடுகொட பகுதியைச் சேர்ந்த 55 வயதான ஒருவர் என்று தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் காலித் துறைமுகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## கரையொதுங்கிவரும் கடற்பாம்புகள்!



முல்லைத்தீவு பெருங் கடலில் கடற் பாம்புகள் சில கரை ஏறுகின்றன என்று அந்தப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.


அந்த மாவட்டத்தில் தொடர்ந்து பல தினங்களாக வறட்சி நிலை ஏற்பட்ட நிலையில் தற்பொழுது காற்றின் வேகம் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக கடலின் இயற்கைச் சமநிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அதனால் இவ்வாறு கடல் பாம்புகள் கரை ஏறுகின்றன என்று கரையோரப் பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையில் இவ்வாறு கடல்பாம்புகள் கரை ஏறுவது அரிய சம்பவமாகவே தான் அறிவதாக அந்தப் பகுதி முதியவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கரை ஏறும் பாம்புகள் மண்ணில் ஊர்ந்து செல்ல முடியாமலும் மீளக் கடலுக்குச் செல்ல முடியாமலும் இருந்துள்ளன. இதனால் அந்தக் கடல் பாம்புகளைப் பிடித்து மீள கடலில் விட்டுள்ளதாகவும் அந்தப்பகுதி மீனவர் ஒருவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

## பண்டாரவளையில் ஆர்ப்பாட்டம்...



உமா ஓயா திட்டத்தால் வீடுகளுக்கும், சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதை அடுத்து பண்டாரவளை வாழ் மக்கள் ஒன்றிணைந்து பெரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நேற்று ஈடுபட்டுள்ளனர். பண்டாரவளை நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடி தற்போது மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். போக்குவரத்து சேவைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டது.

உமா ஓயா திட்டத்தால் நீர் ஊற்றுக்கள் வற்றியுள்ளன என்றும், இதனால் பெரியளவில் நீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# விளக்கமறியலிலுள்ள பொலிஸ்காரர் இன்று அடையாள அணிவகுப்புக்கு

கொழும்பு, ஜூன் 29

இலங்கையில் சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் தொடர்பான தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மியன்மாரைச் சேர்ந்த ரொஹிஞ்சா முஸ்லிம் பெண் ஒருவர் பாலியல் வன்முறைக் குள்ளானார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டு நீதி மன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இன்றைய தினம் அடையாள அணிவகுப்பில் அவரை முன்னிலைப்படுத்துமாறும் பொலிஸாருக்கு நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்டுள்ளது எனப் பாதிக்கப்பட்ட பெண் தரப்பின் சட்டத்தரணியான ஷிராஸ் நூர்தீன் கூறுகின்றார்.

மிரிஹான சட்டவிரோத தடுப்பு முகாமில் நீதிமன்ற உத்தரவின் பேரில் 7 பெண்கள் மற்றும் 16 சிறுவர்கள் உள்ளிட்ட மியன்மார் நாட்டைச் சேர்ந்த ரொஹிஞ்சா முஸ்லிம் அகதிகள் 30 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் 22 வயதான பெண் ஒருவர் நோய் காரணமாக அரச மருத்துவமனை ஒன்றில் தங்கியிருந்து சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவ்வேளை சிகிச்சை முடிந்து அழைத்துச் சென்ற சந்தர்ப்பத்தில் சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிளால் விடுதி ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தான் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டார் என்று பாதிக்கப்பட்ட பெண் பொலிஸில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்திருந்தார்.

சுமார் 5 வருடங்களாக இந்தியாவில் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் பராமரிப்பில் புதுடில்லியிலும் தமிழ்நாடு அதிராம் பட்டினத்திலும் தங்கியிருந்த அவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி தமிழ் நாட்டிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் புறப்பட்டுள்ளனர்.

படகுவழிதவறி இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசித்த நிலையில் காங்கேசன்துறை கடல் பகுதியில் இலங்கை கடற்படையினரால் அந்த 30 பேரும் கைது செய்யப் பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் மிரிஹான சட்ட விரோத குடியேறிகள் தடுப்பு முகாமில் தற்போது வைக்கப்பட்டுள்ளனர். (எ)

# சேதமடைந்த பாடசாலைகளை புனரமைக்க யுனிசெவ் உதவி

சீரற்ற காலநிலையால் சேதமடைந்த பாடசாலைகளை மறுசீரமைக்க உதவி வழங்க யுனிசெவ் நிறுவனம் உதவவுள்ளது.

களுத்துறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் தொடர்பில் முதலில் கவனம் செலுத்தப்பட உள்ளது.

மாவட்டத்தில் வெள்ளப் பெருக்காலும், மண் சரிவாலும் 133 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. கல்வி அமைச்சு மாகாண அமைச்சுகளின் ஒருங்கிணைப்புடன் நோர்வே அரசின் நிதி உதவியில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

இது தொடர்பான பேச்சு ஒன்று களுத்துறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது. இந்த பேச்சில் நோர்வே தூதுவர் யுனிசெவ் நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதி ஆகியோரும் பங்குபற்றினர்.

## உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் நியமனம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக அய்வன் திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தின் போது அவரது நியமனத்துக்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இரட்டை இலை சின்னம், கொடி ஓ.பி.எஸ். அணிக்கு கிடைக்கும்!

## முன்னாள் அமைச்சர் ராஜ கண்ணப்பன் கூறுகிறார்



சென்னை, ஜூன் 29

இரட்டை இலை சின்னமும், கட்சிக் கொடியும் ஓ.பி.எஸ். அணிக்கு கிடைக்கும். சசிகலாவால் அ.தி.மு.க. சிதைந்து கிடக்கிறது என்று முன்னாள் அமைச்சர் ராஜ கண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

ஓ.பி.எஸ். அணியான, அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா அணியின் செயல் வீரர்கள் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே முன்னாள் அமைச்சர் ராஜ கண்ணப்பன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழகத்தில் வாக்கு வங்கி அதிகம் உள்ள ஒரே கட்சியாக அ.தி.மு.க உள்ளது. அ.தி.மு கவைத் தவிர எந்தக் கட்சியாலும் தி.மு.கவை வீழ்த்த முடியாது. தி.மு.க ஊழல் கட்சியாக உள்ளது.

சசிகலா அணியினரை ஓரங்கட்டி வைக்கவே ஓ.பி.எஸ். தலைமையில் அ.தி.மு.க. புரட்சித்தலைவி அம்மா அணி உருவாக்கப்பட்டது.

மு.க.ஸ்டாலின் முதல்வராக வர முடியாது. ஏனென்றால் அவரைவிட சிறந்த தலைவராக ஓ.பன்னீர்செல்வம் திகழ்கிறார். ஜல்லிக்கட்டு, வார்தா புயல் நேரங்களில் சிறப்பாக ஓ.பி.எஸ். செயற்பட்டார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணத்தில் மர்மம் உள்ளது. அதனால் தான் பொது மக்கள் அறியும் வகையில் விசாரணை நடத்தச் சொல்கிறோம்.

சசிகலாவை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. குடியரசுத் தலைவர் தேர்தலுக்குப் பின் தமிழகத்தில் மாற்றம் ஏற்படும். இரட்டை இலை சின்னமும், கட்சிக் கொடியும் ஓ.பி.எஸ். அணிக்கு கிடைக்கும்.

சசிகலாவால் அ.தி.மு.க. சிதைந்து கிடக்கிறது. எதிர் வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி ராமநாதபுரம் அரண்மனை முன்னால் ஓ.பி.எஸ். தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.- என்றும் அவர்தெரிவித்துள்ளார். (க)

# அ.தி.மு.க. செயலாளர் சசிகலாதான்!

## மக்களவை துணைத் தலைவர் தம்பிதுரை கூறுகிறார்




சென்னை, ஜூன் 29

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் சசிகலாதான். அவரை நீக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை என்று மக்களவை துணைத் தலைவர் மு.தம்பிதுரை தெரிவித்துள்ளார்.

தற்போது கட்சியை தலைமை நிர்வாகிகள் கவனித்துக் கொள்கின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களுக்கு அவர் நேற்றுமுன் தினம் அளித்தபேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

முதல்வர் கே.பழனிச்சாமியின் அரசு சிறப்பாக செயற்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு அத்தனை உதவிகளையும் செய்து வருவதுடன், சட்டப் பேரவையில் பல்வேறு திட்டங்களையும் அறிவித்துள்ளது. மறைந்த முதல்வர் ஜெயலலிதா விட்டுச்சென்ற பணிகளை இந்த அரசு தொடர்ந்து செய்து வருகிறது.

ஏரி, குளங்களை தூர்வாரும் பணியை எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் மேற் கொண்டு வருகிறார்.

முதலில் அவர் கோயில் குளங்களைத்தான் தூர்வாரினார். அவருக்கு தற்போது ஆன்மீகத்தில் நம்பிக்கை வந்துவிட்டது. குளத்தை தூர் வாரினால் ஆட்சிக்கு வரலாம் என ஜோதிடர் கூறியதால் தான் அதைச் செய்கிறார்.

அ.தி.மு.கவில் 3 அணிகள் என்பது இல்லை. சில கருத்து வேறுபாடுகள் தான் உள்ளன. அனைவரும் ஒன்று சேர வேண்டும் என்பதால் தொடர்ந்தும் பேசி வருகிறோம். ஒவ்வொருவரும் அவர்களுடைய வழியில் கட்சி இணைய வேண்டும் என்பதற்காக செயற்பட்டு வருகின்றனர். கட்சியை காப்பாற்ற ஒன்று பட்டுச் செயற்பட்டு வருகிறோம்.

தற்போதும் அ.தி.மு.கவில் தலைமை இருக்கிறது. ஆட்சியை முதல்வர் பழனிச்சாமியும், கட்சியைத் தலைமை நிர்வாகிகளும் கவனிக்கின்றனர். கட்சிப் பொதுச்செயலாளர் சசிகலாதான் என்றும் தெரிவித்துள்ளார். (க)

# வாரிசு அரசியலை அ.தி.மு.கவிற்குள் புகுத்தியதால் சசிகலாவை எதிர்க்கிறோம்!

## அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் போர்க்கொடி



வாரிசு அரசியலை அ.தி.மு.கவிற்குள் புகுத்தியதால் தான் சசிகலாவை எதிர்க்கிறோம் என்று தமிழக சட்டப்பேரவை வளாகத்தில் பேசிய அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

தமிழகச் சட்டசபை கூட்டம் நேற்று நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் முருகுமாறன் ராமச்சந்திரன், கனகராஜ், சண்முகம், பாண்டியன், கஸ்தூரி வாசு, அம்மன் அர்ஜூன் ஆகியோர் கூட்டாக வெளியேறியுள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்தக் கட்சியின் நலனுக்காக உழைத்து வருகிறோம். தேவை இல்லாமல் வெற்றிவேல் எம்.எல்.ஏ. பேசக் கூடாது. பொதுச் செயலாளர் பதவிக்கான விதி என்ன என்பது எங்களுக்குத் தெரியும். அதனை வெற்றிவேல் சொல்லித்தரவேண்டியதில்லை. அ.தி.மு.க.வில் எம்.ஜி. ஆரும் சரி, ஜெயலலிதாவும் சரி தங்களது வாரிசாக யாரையும் அறிவிக்கவில்லை.

ஆர்.கே. நகர் தேர்தலின் போது பொதுச் செயலாளர் பெயரை யாரும் குறிப்பிடவில்லை. பொதுச் செயலாளர் சிறைக்குச் சென்ற பிறகு அவரது உறவினரைக் கட்சி பதவியில் நியமித்தது தவறானதாகும். வாரிசு அரசியலை அதிமுகவிற்குள் புகுத்தியதால் சசிகலாவை எதிர்க்கிறோம்.

ஆர்.கே.நகர்தேர்தலின்போது பொதுச் செயலாளர் படத்தை போட்டோ பெயரை சொல்லியோ யாரும் ஓட்டுக் கேட்கவில்லை. அப்போது அங்கு மாவட்டச் செயலாளராக வெற்றிவேல்தான் இருந்தார். அப்போது அவர் என்ன செய்தார்? இப்போது அவர் எங்களுக்கு அறிவுரை கூற வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்துள்ளனர். (க)

# மூன்று நாடுகள் சுற்றுப்பயணத்தை நிறைவு செய்து இந்தியாவுக்குத் திரும்பினார் பிரதமர் மோடி!

## மோடிக்கு சைக்கிள் பரிசளித்தார் நெதர்லாந்து பிரதமர்!





புதுடில்லி, ஜூன் 29

போர்த்துக்கல், அமெரிக்கா, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் சுற்றுப்பயணத்தை நிறைவு செய்து பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவுக்குத் திரும்பியுள்ளார்.

போர்த்துக்கல், அமெரிக்கா, நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கு 4 நாள்கள் சுற்றுப் பயணமாக பிரதமர் மோடி புறப்பட்டுச்சென்றார்.

தனது சுற்றுப்பயணத்தின் போது போர்த்துக்கல் பிரதமர் அந்தோணியா கோஸ்டாவை சந்தித்து இரு தரப்பு பேச்சு வார்த்தைகளை நடத்தினார். பின்னர் இருநாடுகளுக்கும் இடையே, 11 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

பின்னர் போர்த்துக்கல் பயணத்தை நிறைவு செய்து பிரதமர் மோடி அங்கிருந்து அமெரிக்கா புறப்பட்டார். உலக நாடுகளின் கவனத்தை பிரதமர் மோடியின் அமெரிக்கப் பயணம் ஈர்த்தது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை முதல் முறையாகச் சந்தித்த பிரதமர் மோடி விரிவான ஆலோசனை நடத்தினார். தங்கள் நாடுகளை வலுவாக்கும் நோக்கில் பொருளாதார ஒத்துழைப்பு இரு நாடுகளுக்கும் இடையே அதிகரிப்பது குறித்து இந்த சந்திப்பின்போது ஆலோசிக்கப்பட்டது.

நிறைவாக நேற்று முன்தினம் பிரதமர் மோடி நெதர்லாந்து சென்றார். நெதர்லாந்து பிரதமர் மார்க் ரோட்டேவை பிரதமர் மோடி சந்தித்தார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையே சமூக பாதுகாப்பு, நீர் மற்றும் கலாசார ஒத்துழைப்பு என 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

தனது மூன்று நாடுகள் சுற்றுப்பயணத்தை நிறைவு செய்த பிரதமர் மோடி, நேற்று அதிகாலை இந்தியாவுக்குத் திரும்பினார்.

டில்லி விமான நிலையம் வந்த மோடியை வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் உட்பட அதிகாரிகள் வரவேற்றுள்ளனர்.

**சைக்கிள் பரிசு**

இதேவேளை, நெதர்லாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பிரதமர் நரேந்திர மோடிக்கு, அந்நாட்டு பிரதமர் மார்க் ரட்டே சைக்கிள் ஒன்றை பரிசளித்துள்ளார்.

அவருக்கு மோடி நன்றி தெரிவித்துள்ளார். மேலும், சைக்கிள் மற்றும் நெதர்லாந்து பிரதமருடன் பல்வேறு புகைப் படங்களை மோடி எடுத்துக் கொண்டார்.

பிரதமர் மார்க் ரட்டே அளித்த சைக்கிள் நெதர்லாந்து நாட்டில் போக்குவரத்துக்கு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருவதாகும்.

நெதர்லாந்து நாட்டில் 36 சதவீதம் மக்கள் சைக்கிள் போக்குவரத்தையே விரும்புகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காசாவில் ஹமாஸ் இயக்க தளங்கள் மீது தாக்குதல்!



## இஸ்ரேல் அதிரடி நடவடிக்கை

டெல் அவிவ், ஜூன் 29

காசா உள்ளிட்ட பகுதிகளில் உள்ளஹமாஸ்இயக்கத்தினரின் தளங்களைக் குறிவைத்து இஸ்ரேல் நேற்று முன்தினம் அதிரடியாகத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இஸ்ரேல் மீது காசா பகுதியில் இருந்து ரொக்கெட் குண்டு வீச்சுத் தாக்குதலை நடந்தியுள்ளது. அதைத் தொடர்ந்து காசா உள்ளிட்ட பகுதிகளில் உள்ளஹமாஸ்இயக்கத்தினரின் தளங்களைக் குறிவைத்து இஸ்ரேல் நேற்றுமுன்தினம் அதிரடியாகத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

காசா, ரபா மற்றும் காசாவுக்கு வெளியே உள்ள ஓர் இடம் என 3 இடங்களில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பாலஸ்தீனப் படைகளும், பொது மக்களும் இந்தத் தாக்குதலை உறுதி செய்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

ஆனால், ஹமாஸ் தளத்தின் அருகேயுள்ள வீட்டில் உள்ள ஒருவர், இந்தத் தாக்குதலில் படுகாயம் அடைந்து ரத்தம் வழிந்த நிலையில் சிகிச்சைக்காக எடுத்துச்செல்லப்பட்டுள்ளார் என ஊடகம் ஒன்றின் புகைப்படக் கலைஞர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் பற்றி இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிக்கையில்:-

ஹமாஸ் இயக்கத்தினருக்கு உரித்தான 2 கட்டமைப்புகளை குறி வைத்து இஸ்ரேலின் 2 போர் விமானங்கள் வான்தாக்குதல்கள் நடத்தின. அங்கிருந்து வந்த ரொக்கெட் வீச்சுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது.

ஹமாஸ் இயக்கம், இஸ்ரேலை பலஸ்தீனர்களுக்கு பெற்றுத்தந்து, இஸ்ரேல், மேற்குக்கரை, காசா பகுதிகளை ஒருங்கிணைத்து இஸ்லாமிய குடியரசாக மாற்றும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் சைபர் தாக்குதல் தீவிரம்; பெரும் நெருக்கடியில் உலக நாடுகள்!



வொஷிங்டன், ஜூன் 29

உலகிலுள்ள பிரதான நிறுவனங்கள் பலவற்றை இலக்கு வைத்து மீண்டும் சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த மாதம் கப்பமாக பணம் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குச் சமமான ஒன்றே மீண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா, பிரித்தானியா, உக்ரைன், ரஷ்யா, டென்மார்க், ஸ்பெய்ன், நெதர்லாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பிரதான நிறுவனங்களின்கணினிகட்டமைப்பை இலக்கு வைத்து சைபர் தாக்குதல்மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

உக்ரைன் அரச நிறுவனம், கிவ் விமான நிலையம், உக்ரைன் மத்தியவங்கி, என்டநோவ் விமான தயாரிப்பு நிறுவனம், ரஷ்ய எண்ணெய் நிறுவனம் மற்றும் டென்மார்க் கடற்படை நிறுவனங்களும் இதில் அடங்கும்.

இந்த சைபர் தாக்குதல் எந்த நாட்டில் இருந்து எந்த நபரால் அல்லது குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளதென இதுவரையில் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந் தாக்குதலினால் வின்டோஸ் கணினி கட்டமைப்பின் நடவடிக்கை முழுமையாகத் தடைப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பல நாடுகளை முடக்கிப் போட்ட சைபர் தாக்குதல், வடகொரியாவிலிருந்து செயற்படுத்தப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரசியலிலிருந்து விலகுகிறார் ட்ரம்பின் மகளான இவன்கா!



நியூயோர்க், ஜூன் 29

அரசியலில் இருந்து விலகியிருக்கவே விரும்புகிறேன் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மகளும் ஜனாதிபதியின் உதவியாளருமான இவன்கா ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சர்வதேச ஊடகம் ஒன்றினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இது குறித்து இவன்கா ட்ரம்ப் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியலில் முற்று முழுதாக நேரத்தைச் செலவிடுவதில் எனக்கு ஆர்வம் இல்லை. ஜனாதிபதி ட்ரம்பின் அரசியல் முன்னெடுப்புக்கள் தனிச் சிறப்புடையவை .

அத்துடன், இந்தச் செயற்பாடுகள் யாராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத மாற்றங்களை ஏற்படுத்தும்.

ட்ரம்புடன் இணைந்து பணியாற்ற கிடைத்த வாய்ப்பை நினைத்து நான் பெருமையடைகிறேன். அரசியலில் தொடர்ந்து நிலைத்திருக்கும் விருப்பம் எனக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெனிசுலாவில் நீதிமன்றம் மீது ஹெலியில் இருந்து தாக்குதல்!



கராகஸ், ஜூன் 29

வெனிசுலாவில் உயர் நீதிமன்றம் மீது ஹெலிக்கொப்டர் மூலம் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்துக்கு அந்நாட்டு ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ கண்டம் தெரிவித்துள்ளார்.

தென்னமெரிக்க நாடான வெனிசுலாவில் நிகோலஸ் மதுரே ஜனாதிபதியாகப் பதவி வகிக்கிறார்.

அவருக்கு எதிராக கடந்த 3 மாதங்களாக வன்முறை சம்பவங்களும், போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன. அவர் பதவி விலகக் கோரிக்கை வலுத்து வருகிறது.

இந்த நிலையில், தலைநகர் கராகஸில் உள்ள உயர் நீதிமன்றத்தின்மேல் பொலிஸார் பயன்படுத்தும் ஹெலிக்கொப்டர் ஒன்று தாழ்வாகப் பறந்துள்ளது. அதில் அமர்ந்து இருந்த பொலிஸ் அதிகாரி முகத்தைத் துணியால் மறைத்தபடி அமர்ந்து இருந்துள்ளார்.

திடீரென அவர் தான் வைத்திருந்த துப்பாக்கியால் நீதிமன்றத்தின் மீது சரமாரியாகச் சுட்டுள்ளார். மேலும் கையெறி குண்டுகளையும்வீசிதாக்குதல் நடத்தியுள்ளார். இதனால், அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளன.

உடனடியாக இராணுவமும், பொலிஸாரும் உஷார்படுத்தப்பட்டு அந்த ஹெலிக்கொப்டர் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இற்தத் தாக்குதலால் ஏற்பட்ட உயிர்ச்சேதம், பொருள்சேதம் போன்ற விவரங்கள் வெளியிடப்படவில்லை.

# முகநூல் பயனாளிகள் 200 கோடியைத் தாண்டினர்!

சான்பிரான், ஜூன் 29

பிரபலசமூகவலைத்தளமான முகநூல் (பேஸ்புக்) சேவையை பயன்படுத்துவோர்எண்ணிக்கை 200 கோடிகளை கடந்துள்ளது.

சர்வதேச அளவில் மாதந்தோறும் 200 கோடி பேர் பயன்படுத்துகின்றனர் என பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதிவரை பேஸ்புக்சேவையை சுமார் 194 கோடி பேர் பயன்படுத்தினர் என பேஸ் புக் நிறுவுநர் மார்க் ஜூக்கர்பர்க் தெரிவித்துள்ளார்.

இது கடந்த ஆண்டை விட 17 சதவிகிதம் அதிகம் ஆகும். பேஸ்புக் வளர்ச்சி மற்ற சமூக வலைத்தளங்களை விட பன்மடங்கு அதிகரித்துள்ளது. டுவிட்டர் சேவையைக் கடந்த ஏப்ரல் மாதம் வரை சுமார் 32.8 கோடி பேர் பயன்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.




# இலங்கை கிரிக்கெட் சபையால் இழிவுபடுத்தப்பட்டனர் கிரஹாம் போர்ட், சங்கக்கார!

கொழும்பு, ஜூன் 29

இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றியிருந்த கிரஹாம் போர்ட் தனது பதவியை இராஜினாமாச் செய்து நாட்டைவிட்டு வெளியேறிய சம்பவம் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அந்தவகையில் அவர் விலகிய சம்பவம் இலங்கை அணியின் கிரிக்கெட் ஜம்பவான் சங்கக்காரவை யும் இழிவுபடுத்துவதாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களிலிருந்தே இலங்கைக் கிரிக்கெட் சபைக்கும் பயிற்றுநர்க ளுக்கும் இடையில் உரசல் போக்கு நீடித்தமையையே காணக்கூடியதாக உள்ளது.

ஒரு கிரிக்கெட் வீரராக ஆஷஸ் கிரிக்கெட் தொடர் மற்றும் உலகக் கிண்ணத் தைக் கைப்பற்றி பின்னர் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் களாக மாறிய விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரே கிரிக்கெட் உலகில் காணப்படுகின்றனர்.

அந்த வகையில் பயிற்று விப்பாளர்களாக உரு வெடுத்த இரு கிரிக்கெட் வீரர்களில் டேரன் லீமன் மற்றும் ஜெப் மார்ஷ் ஆகி யோர் காணப்படுகின்றனர்.

அந்த வகையில் இலங்கை கிரிக்கெட் அணி யின் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றிய ஜெப் மார்ஷை எவ்விதமான பாரபட்சமின்றி 2012 ஆம் ஆண்டு இலங்கை கிரிக் கெட் சபை பணி நீக்கம் செய்திருந்தது.

2011ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கான சுற்றுப் பயணத்தில் ஒரே யொரு டெஸ்ட் போட்டியில் வெற்றியீட்டி இருந்தமையே இதற்கான காரணமாக கூறப்பட்டது. எனினும் இதை ஏற்காத ஜெப் மார்ஷ் இலங்கை கிரிக்கெட் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற் கொண்ட நிலையில் அதில் வெற்றி பெற்றதனால், இலங்கை கிரிக்கெட் சபைக்கு மிகப்பெரிய இழப்பீடு ஒன்றை வழங்க நேரிட்டது.

அதேபோன்று முன்னாள் பயிற்றுவிப்பாளராக கடமை யாற்றிய சந்திக்க ஹத்துரு சிங்கவையும் அந்தப் பதவியிலிருந்து தூக்கி எறிந்திருந்தது. அதிலிருந்து இலங்கை கிரிக்கெட் சபையின் நன் மதிப்புகள் குறைந்திருந்தது.

இந்நிலையில், 2013ஆம் ஆண்டு ஸ்டீவ் ரிக்ஸன் பயிற்றுவிப்பாளர் பதவிக் காக விண்ணப்பித்திருந்தார். எனினும், முன்னாள் ஆஸ்தி ரேலிய விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்ட வீர ரான ஸ்டீவ் ரிக்ஸன் இலங்கை கிரிக்கெட் சபை தொழில்முறை நிபுணத்துவ மட்டத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதா கக் குறை கூறியிருந்தார்.

இலங்கை கிரிக்கெட் சபை எனக்குப் புதிதாக வடிவமைக்கப்பட்ட ஒரு ஒப்பந்தத்தை அனுப்பியது, உண்மையில் அது மிகவும் சங்கடமாக இருந்தது, ஏனெனில் மிகவும் மோச மான முறையில் வடிவமைக் கப்பட்டு இருந்தது, என்று ஸ்டீவ் ரிக்ஸன் குறிப்பிட் டிருந்தார்.

அதனையடுத்து 2015 ஆம் ஆண்டு சர்வதேச மட்டத்தில் புகழ்பெற்ற எந்தவொரு பயிற்றுவிப் பாளரும் இலங்கை கிரிக் கெட் அணிக்கு பயிற்று விப்பாளர்களாக கடமை யாற்ற முன்வரவில்லை. இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் சபையானது, முன்னாள் இலங்கை அணி யின் பயிற்றுவிப்பாளரான கிரஹாம் போர்ட்டை இலக்கு வைத்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றியிருந்த கிரஹாம் போர்ட் குறித்த ஒப்பந்தத்தின் முடிவின் பின்னர் இலங்கை கிரிக் கெட் சபையினால் மீண்டு மொருமுறை வழங்கப்பட்ட வாய்ப்பினை நிராகரித் திருந்தார்.

தற்போது குமார் சங்கக்கார விளையாடி வரும் இங்கி லாந்து உள்ளூர் கழகமான சர்ரே அணியில் பயிற்றுவிப் பாளராக இணைந்து கொண்ட கிரஹாம் போர்ட் அவ்வணியை டிவிஷன் 1 இற்கு தரமுயர்த்த தனது அயராத பங்களிப்பை வழங்கியிருந்த அதேநேரம் அந்தப் பதவியில் முழு திருப்தியுடன் பணியாற் றியிருந்தார்.

இந்த நிலையில், எப்படி யாவது இலங்கை பயிற்று விப்பாளராக கிரஹாம் போர்ட்டை இணைத்துவிட வேண்டும் என்று எண்ணிய இலங்கை கிரிக்கெட் சபை முன்னாள் அணித் தலைவர் குமார் சங்கக்காரவை நாடியது. ஏனெனில், கிரஹாம் போர்ட் மற்றும் குமார் சங்கக்கார ஆகியோரி டையே சிறந்த நட்பு ரீதியிலான உறவொன்று இருந்தது.

இந்தச் சிறந்த உறவு முறை கள் காரணமாக இலங்கை கிரிக்கெட் சபை சார்பாக கிரஹாம் போர்ட்டிடம் பேசு மாறு இலங்கைக் கிரிக்கெட் சபை குமார் சங்கக்காரவை வேண்டியிருந்தது. முதலில் தயக்கம் காட்டிய சங்கக்கார இலங்கை கிரிக்கெட் சபை யினால் வழங்கப்பட்ட பல உறுதி மொழிகளுக்கு பின் னர் இது குறித்து கிரஹாம் போர்ட்டிடம் பேசுவதாக ஒத்துக்கொண்டார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் உறுதி மொழி களை நம்பிய குமார் சங்கக் கார கிரஹாம் போர்ட்டிடம் தன்னுடைய இறுதித் தீர்மா னத்தை மறுபரிசீலனை செய்யுமாறு வேண்டினார். எனினும், நிலையில்லாத கொள்கைகளையுடைய இலங்கை கிரிக்கெட் சபை யுடன் இணைவதற்கு கிரஹாம் போர்ட் தயக்கம் காட்டியிருந்தார்.

மேலும் பல்வேறு முறை களில் கிரஹாம் போர்ட்டை சமாதானப்படுத்திய சங்கக் கார இலங்கை கிரிக்கெட் சபை வழங்கிய உறுதி மொழிகளைத் தெரிவித்தார். 2019 ஆம் ஆண்டு உல கக் கிண்ணப் போட்டிகள் வரை இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக ஒப்பந் தம் செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சங்கக்காரவுடனான நீண்ட கலந்துரையாடல் மற்றும் சிறந்த உறவு முறை காரண மாக கொழும்புக்கு வர கிரஹாம் போர்ட் ஒப்புதல் அளித்தார். அதேநேரம், அவரை பெரிதும் எதிர்பார்த் திருந்த சர்ரே கிரிக்கெட் கழகத்தின் பணிப்பாளர் அலெக் ஸ்டுவர்ட் இந்தக் தீர்மானம் தமக்கு ஏமாற்றம் அளிப்பதாகவும், கிரஹாம் போர்ட் தலைமை பயிற்று விப்பாளராக மட்டுமல்ல கடந்த இரண்டு வருடங்க ளில் எங்களுடைய கிரிக் கெட் தரத்தை உயர்த்து வதற்கு பல வழிகளில் பங்களிப்புச் செய்திருந்தார் என்று மிகவும் வருத்தத் துடன் குறிப்பிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து இலங்கைக்கு வருகை தந்த கிரஹாம் போர்ட் இலங்கை அணியை மீண்டும் சீரமைக் கும் பணியில் ஈடுபட்டார். அந்த வகையில் கடந்த ஆண்டு இலங்கையில் நடைபெற்ற ஆஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் போட்டித் தொடரில் இலங்கை 3:0 என்ற கணக்கில் வெற்றியீட்டி ஆஸ்திரேலிய அணியை 'வெள்ளையடிப்பு'ச் செய்தது.

எனினும், காயம் காரண மாக அணியிலிருந்து வில கிய அஞ்சலோ மத்தியூஸ், லசித் மலிங்க மற்றும் தினேஷ் சந்தி மாலின் இழப்பினூடாக தென்னா பிரிக்க சுற்றுப் பயணத்தின் போது 3:0 கணக்கில் டெஸ்ட் தொடர் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டி களைக் கொண்ட தொடரை யும் இழந்து பெரும் பின்ன டைவை இலங்கை அணி கண்டது. அதுமட்டுமல்ல முதல் தடவையாக பங்களா தேஷ் அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியைத் தழுவியது.

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணி மோசமான முறை யில் விளையாட வேண்டு மென்பதே அதிகாரிகளின் தேவையாக இருந்தது. அதன் மூலம் தலைமை பயிற்றுவிப்பாளரை மாற்றக் கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்வதே அவர்களது நோக்கமாக இருந்தது.

அத்துடன், மந்த கதியில் ஓவர்களை வீசியதன் கார ணமாக தற்காலிக அணித் தலைவர் உபுல் தரங்க இரண்டு போட்டிகளுக்கு தடை விதிக்கப்பட்ட போது இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபால தலைமை பயிற்றுவிப்பாளர் கிரஹாம் போர்ட்டை குற்றம் சாட்டினார்.

இந்நிலையில், சம்பி யன்ஸ் கிண்ணப் போட்டி களில் கிரஹாம் போர்ட் எதிர்கொண்ட தடைகளை உணர்ந்து கொண்ட சங்கக் கார கிரஹாம் போர்ட்டுக்கு ஆதரவு கொடுத்தார்.

கிரஹாம் போர்ட் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. எங்களுக்கு உலகில் தலை சிறந்த பயிற்றுவிப்பாளர் ஒருவர் கிடைத்துள்ளார். திறமையுள்ள இலங்கை கிரிக்கெட் அணிக்கு சரியான பயிற்றுவிப்பாளர் கிடைத்துள்ளார். இலங்கை கிரிக்கெட் அணிக்கு முழு சுதந்திரம் கொடுக்கப்பட் டுள்ளது.

அவர்களுக்கு முடிந்த திறமைகளை வெளிப் படுத்த அனுமதி அளிக்கப்பட் டுள்ளது. அதாவது, பயிற்று விப்பாளர் இருப்பது பயிற்சி அளிப்பதற்கு, கிரிக்கெட் வீரர்கள் இருப்பது கிரிக் கெட் விளையாடுவதற்கு என்றும் அவர் களுக்கு தடையின்றி விளையாட வாய்ப்புக் கொடுத்து, அவர்கள் வெளிப்படுத்தும் திறமைகளுக்கு அவர்களே பொறுப்பு என்றால் நிச்சய மாகத் திறமைகளை இளம் வீரர்கள் வெளிப்படுத்து வார்கள் என்று தெரிவித்தார்.

புதிதாக உருவாக்கப்பட்ட கிரிக்கெட் முகாமையாளர் என்ற பதவிக்கு முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரரான அசங்க குருசிங்க நியமிக்கப் பட்டார் அத்துடன் தலைமை பயிற்றுவிப்பாளரின் சில அதிகாரங்கள் அசங்க குரு சிங்கவுக்கு பிரித்து வழங்கப் பட்டமை கிரஹாம் போர்ட்டின் பணிகளுக்கு இடையூறாக அமைந்தி ருந்தது.

இந்நிலையில், உத்தி யோகபூர்வ அதிகாரிகளை சந்தித்த கிரஹாம் போர்ட் இந்நிலைமை குறித்து விளக்கியதோடு, முழுமை யான பொறுப்புகளை வழங் குவதில் சிக்கல் இருந்தால் அணியின் திறமைகளை முழுமையாக வெளிக் கொண்டு வருவதில் பாதிப்பு ஏற்படலாம் என தனது கருத்தைத் தெரிவித் தார். இதற்கு இலங்கை கிரிக்கெட் சபை மறுப்பு தெரிவித்து தங்களது கட்டளைகளுக்கு ஏற்ப பயிற்சிகளை மேற்கொள்ளு மாறும் அவ்வாறில்லை யெனில் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்துவிலகலாம் எனத் தெரிவித்தது.

இந்தக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டதால் கிரஹாம் போர்ட் இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து வெளியே றும் நிலைக்குத் தள்ளப் பட்டார்.

# மலிங்கவுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைத் தீர்ப்பு வெளியாகியது!

நடைபெற்று முடிந்த சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணியின் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில், இலங்கை அணியின் களத்தடுப்பு மோசமாக காணப்பட்டதால் அரை இறுதிக்குச் செல்லும் வாய்ப்பை இழந்தது.

இதனால் விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, எதிர்வரும் காலங்களில் இலங்கை அணி தெரிவின்போது உடற்தகுதியும் ஒரு காரணியாகக் கருதப்படும் எனக் கூறியிருந்தார்.

அமைச்சருடைய இந்தக் கருத்துக்கு லசித் மலிங்க மிகக் கடுமையான விமர்சனங்களை ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

லசித் மலிங்க இலங்கை கிரிக்கெட் சபையின் விதிமுறைகளுக்கு மீறி செயற்படுகிறார் என குற்றம் சாட்டி ஒழுக்காற்று விசாரணைக்கு அழைக்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர இலங்கை கிரிக்கெட் சபையிடம் கோரியிருந்தார்.

இதன் அடிப்படையில் இலங்கை அணியின் நட்சத்திர பந்து வீச்சாளர் லசித் மலிங்க மீதான ஒழுக்க குற்றச்சாட்டு விசாரணை தொடர்பான முடிவு தற்போது வெளியிடப்பட்டிருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

மலிங்க இலங்கை கிரிக்கெட் சபையின் விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில், இலங்கை கிரிக்கெட் சபை செயலாளர் மோகன் சில்வா, இலங்கை கிரிக்கெட் சபை நிறைவேற்று அதிகார உறுப்பினர் ஆஷ்லி டி சில்வா மற்றும் ஒழுக்காற்று குழுவின் தலைவர் அசேல ரேகவ ஆகியோர் கொண்ட விசேட குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த குழுவின் விசாரணை மூலம், மலிங்க விதிமுறைகளை மீறி செயற்பட்டது நிரூபிக்கப்பட்டிருந்தது. மலிங்க தன் மீது விதிக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டதோடு, அதற்காக மன்னிப்பும் கோரியுள்ளார்.

மலிங்கவிற்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ள காரணத்தினால், அவர் மீது எதிர்வரும் ஆறு மாத காலத்தில், இவ்வாறான குற்றமொன்று மீண்டும் நிரூபிக்கப்படும் பட்சத்தில் மலிங்க தொடர்ந்து வரும் ஒரு வருடத்துக்கு போட்டிகளில் விளையாடத் தடை செய்யப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, அவர் விளையாடும் அடுத்த ஒரு நாள் போட்டியின், போட்டி சம்பளத்தில் 50 சதவீத அபராதமாக செலுத்தவும் கட்டளை இடப்பட்டுள்ளது.

இதனால், மலிங்க எதிர்வரும் ஸிம்பாப்வே - இலங்கை அணிகளுக்கு இடையிலான தொடரில் தடைகள் ஏதுமின்றி பங் கேற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரப்பகிர்வுதொடர்பான புதிய அரசமைப்பு விவகாரங்களைத் தமிழர் தரப்பில் கையாள்பவர்கள் இவர்கள் இருவருமே. அவர்களைப் பெயர் குறிப்பிடாமல் வைது இருக்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

முதல்வர் அலுவலகத்திலிருந்து நேற்று முன்தினம் அனுப்பப்பட்டமை போன்று நேற்றும் கேள்வி - பதில் வடிவத்திலான செய்தி ஒன்று ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் முழு வடிவம் வருமாறு:-

ஊடகவியலாளர் கேள்வி: வடக்கு மாகாணசபையில் நடப்பவற்றுக்கும் தெற்கின் அரசியலுக்கும் ஏதும் சம்பந்தமுண்டா?

பதில்: வடக்கு மாகாண சபையையும் அதன் செயற்பாடுகளையும் திட்டமிட்ட வகையில் குழப்புவதன் மூலம் தமிழ் மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கு அரசாங்கமும் அவர்களோடு சேர்ந்து இயங்குகின்றதமிழ்அரசியல்வாதிகளும் முனைந்து வருகின்றார்களோ என்று எண்ண வேண்டியுள்ளது. அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வைப் பெற்றுத் தர வேண்டிய அரசாங்கம், அதனைச் செய்து முடிக்காது காலத்தை இழுத்தடித்து வருவதோடு, உத்தேச அரசமைப்பில் தமிழர் தரப்புக்கு அதிகாரங்களை முழுமையாகப் பகிர்ந்தளிக்காத விதத்தில் மாற்றங்களை உள்ளடக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டு வருகின்றது. இதிலிருந்து தமிழர்களுடைய கவனத்தைத் திசை திருப்புவதற்காகவே அவர்கள் வடமாகாணசபையைக்குழப்பமுனைகின்றனரோ என்ற சந்தேகம் எம்முள் பலரிடம் எழும்புகின்றது.

சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி அதிகாரம், வடக்கு கிழக்கு இணைப்பு, நிதி உட்பட பல்வேறு ஆக்க பூர்வமான அதிகாரப் பகிர்வைத் தமிழர் தரப்பு எதிர்பார்த்துள்ள வேளையில், அவற்றை வழங்காது ஒரு அரைகுறைத் தீர்வைத் திணிப்பதற்கு அரச தரப்பு முயன்று வருகின்றது. *இவ்விடயங்களைக் கையாளும் குறித்த சில தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் அரசின் இந்தப் போக்கிற்கு ஆதரவளித்து வருகின்றமையுடன் மக்களுக்கு இதுதொடர்பிலானவிடயங்களைத் தெளிவுபடுத்தாது மூடு மந்திரம் போன்று அவற்றைக் கையாண்டும் வருகின்றனர்.*

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு மேல் எதையும் தமிழ் மக்கள் எதிர்பார்க்க முடியாது என்று சிலர் கூறிவருகின்றமை சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகின்றது.

இவ்விடயங்கள் தொடர்பில் தமிழ் மக்களுடைய கவனத்தைத் திசைதிருப்பும் முகமாக நன்கு திட்டமிடப்பட்ட வகையில் வடமாகாணசபையின் செயற்பாடுகளில் தொடர்ச்சியாகக் குழப்பங்களை உருவாக்கி தமிழ் மக்களினதும் தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களதும் எனதும் கவனத்தையும் திசைதிருப்ப அரசும் அவர்களுக்குச் சார்பான சில தமிழ் அரசியல்வாதிகளும் முயன்று வருகின்றனர் என்றே தோன்றுகின்றது.

இதன் ஓர் அங்கமாக வட மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலரைப் பயன்படுத்தி வடமாகாணசபையில் தொடர்ச்சியான குழப்பத்தை உருவாக்கி வருகின்றனர்.

எனவே இது தொடர்பில் தமிழர் தரப்பு விழிப்படைதல் அவசியமானது. உத்தேச அரசமைப்பு மாற்றம் தொடர்பில் என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பது பற்றி மக்கள் கவனம் செலுத்துதல் அவசியமானது. இல்லாதுபோயின் எமது கவனத்தைத் திசைதிருப்பி வைத்துக்கொண்டு தாம் நினைத்ததை நிறைவேற்ற முனையும் சக்திகளுக்கு அது வாய்ப்பாக அமைந்து விடும். இத்தருணத்தில் எம்மிடையே விழிப்பு அவசியம். - என்றுள்ளது.

## கூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டுக் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இக் காட்டுமிராண்டித்தனமான, கொடூரமான சம்பவம் யாழ். தீவகத்தில் மட்டுமல்லாது நாடு முழுவதிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. இது பெற்றோர்களிடத்தில் மட்டுமல்லாது மாணவர்களிடத்திலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக ஒரு வருடகாலமாகப் புலன் விசாரணை செய்து எதிரிகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இனங்காட்டியுள்ளார்கள். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகள் சட்டமா அதிபரின் மேற்பார்வையிலும், வழிநடத்தலிலும் நடைபெற்றன.

சகல தரப்பினர் மத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்திய இச் சம்பவத்தின் குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனை மக்களுக்கு ஒரு செய்தியைச் சொல்லுவதாக அமைய வேண்டும்.

இவ்வழக்கில் நீதியை நிலைநாட்டுவதற்கு சகலவளங்களையும் பயன்படுத்த நாங்கள் தயாராக உள்ளோம். இவ்வழக்கு நடவடிக்கையில் சகல தரப்பினர்களுடைய உரித்துக்களும் பாதுகாக்கப்படும் என்றும் நம்புகின்றோம்.

சில சந்தேக நபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில், இது கூட்டுப் பாலியல் வன்புணர்வோ, கூட்டுக் கொலையோ மட்டும் அல்ல என்பது தெரியவந்துள்ளது. இச் சம்பவத்திற்கு மேலதிக பின்னணிகளும் உண்டு.

இச் சம்பவம் நன்கு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட குற்றமாகும். இதற்கு, சர்வதேச அளவில் குற்றங்களுக்கான தயார்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது ஒரு சர்வதேச மயப்படுத்தப்பட்ட குற்றம் என்று சொல்வதற்கு நான் தயங்க மாட்டேன்.

இக்குற்றங்களின் பின்னணியில் இன்னுமொரு குழுவினர் உள்ளார்கள். அந்த குழுவினர் சர்வதேச அளவில் எமது நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த முயற்சித்துள்ளார்கள்.

### சுவிஸ் குமார்

இவ்வழக்கின் 1,2,3 ஆம் எதிரிகளும், அதே போன்று 6,9 ஆவது எதிரிகளும் மச்சான்மார். 5,7,8 ஆம் எதிரிகள் உறவினர்கள் அல்லர். இதில் 9 ஆவது எதிரி சுவிஸ்குமார் பிரதானமானவர்.

அவர் சுவிஸ் நாட்டின் குடியுரிமை பெற்றவர். இருப்பினும் அதிக தடவைகள் யாழ்ப்பாணத்திற்கு வந்து செல்வதுண்டு. அவர் சுவிஸ் நாட்டில் வைத்து சர்வதேச சந்தைப்படுத்தல் ஒன்றுக்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளார்.

அது, தெற்காசிய நாட்டில் வயது குறைந்த, அழகான பெண்ணை கூட்டாகச் சேர்ந்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவது, அப்பெண்ணைக் கூட்டாகச் சேர்ந்து கொலை செய்வதை முழுமையாக வீடியோ படம் பிடித்து நேரலையில் (லைவ்) காண்பித்துப்பணத்தை ஈட்டிக் கொள்வதே ஆகும்.

இதற்காகப் பின்னப்பட்ட சதி வலையிலேயே புங்குடுதீவு மாணவி வித்தியா வீழ்த்தப்பட்டுள்ளார். இச் சதித்திட்டம் தொடர்பாக 6 ஆவது எதிரிக்கு முதலில் தெரியப்படுத்தியுள்ளார்.

இச் சதிவலைத்திட்டம் 9 எதிரிகளுக்கும் தெரிந்ததே. இத்திட்டத்திற்கான பணம் இலங்கையில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. இத்தகவல்கள் அனைத்தையும் சிறைச்சாலையில் இருந்த மற்றுமொரு சகபாடிக்கு 9ஆவதுஎதிரிசொல்லியுள்ளார்.

மேலும் 9 ஆவது எதிரியை புலன் விசாரணைக்கு உட்படுத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவருக்கு 20 மில்லியன் (2 கோடி) ரூபா பணத்தை இலஞ்சமாக வழங்குவதற்கும் 9 ஆவது எதிரி பேச்சு நடத்தியுள்ளார். இவ்வாறு இலஞ்சம் கொடுக்க முற்பட்ட சம்பவம் தொடர்பான விளக்கம் தனியாக மேற்கொள்ளப்படவுள்ளது.

### கைத்தொலைபேசியில் வீடியோப் பதிவு

வித்தியாவை கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய முழுமையான சம்பவத்தை 5,6 ஆவது எதிரிகள் மாறி மாறி கைத்தொலைபேசியில் வீடியோ பதிவு செய்துள்ளனர். இவ்வாறு பதிவு செய்யப்பட்ட வீடியோவை ஒரு தொகுப்பாக மாற்றி, அதனைச் சர்வதேச சந்தைக்கு, விற்பனை செய்துள்ளமை சான்றுகள் மூலம் தெரியவருகின்றது.

வித்தியாவின் சடலத்தின் மீது பிரேத பரிசோதனை நடத்திய வைத்தியர் அவளுடைய யோனிச் சவ்விலும், அதனை சூழ உள்ள பகுதிகளிலும் பல காயங்கள் இருந்தமையை இணங்கண்டுள்ளார். பல தடவை மீண்டும் மீண்டும் யோனி வழியாக ஆணுறுப்பு உட்செலுத்தப்பட்டமையையும் அவர் இணங்கண்டுள்ளார்.

மேலும் வித்தியாவின் கழுத்தில் சுருக்கிட்டு, மூச்சுக் குழாயை அடைக்கச் செய்து அவரைக் கொலை செய்துள்ளார்கள். இது மட்டுமல்லாமல் வித்தியாவின் தலையின் பின்பக்கத்தில் காயங்கள் இருந்தமையையும் வைத்திய அதிகாரி உறுப்படுத்தியுள்ளார்.

வித்தியா பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கும்போது, கடத்திச் செல்லப்பட்டுள்ளார். கடத்திச் செல்லப்பட்ட அவள், பாழடைந்து கைவிடப்பட்ட வீட்டிற்குள் இழுத்துச் செல்லப்பட்டு கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன் பின்னர் அவளுடைய சடலம் மீட்கப்பட்ட இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று விசாரணைகள் ஊடாகத் தெரியவந்துள்ளது. - என்றார்.

### ஒரு வாரத்தில் விசாரணை முடிவு

இந்த வழக்கை அடுத்த ஏழு நாள்களுக்குள் நடத்தி முடிக்குமாறும் அவர் நீதி ஆயத்தை நேற்றுக் கோரியிருந்தார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் உள்ளடங்கிய குழுவின் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைகள் இடம்பெறுகின்றன.

அத்துடன், சிவில் சாட்சியப் பதிவுகள் இன்று ஆரம்பமாகும் எனவும், நிபுணத்துவ சாட்சியப் பதிவுகள் அடுத்த வாரம் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் தடுப்பு காவலில் உள்ள ஒன்பது எதிரிகளும் நேற்றுப் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். (உ)

## அற்புதங்கள்...

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோல 1983 ஆம் ஆண்டு இனக் கலவரம் ஏற்பட்டபோது மார்கழி மாதம் பிள்ளையார்கதை இடம்பெறும் வேளையில் ஒரு நாள் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டு இராணுவம் ரோந்து சென்று கொண்டிருந்தபோது எமது ஆலயத்தில் பிள்ளையார் கதை படித்துக் கொண்டிருந்த பக்தர்களைப் பார்த்து "இன்று ஊரடங்குச் சட்டம், யார் உங்களை கோவிலுக்கு வரச்சொன்னது" என்று உரத்த குரலில் மிரட்டி பிள்ளையார் கதைப் புத்தகங்களையும் கிழித்து எறிந்துவிட்டுச் சென்றபோது பாலைக்குழி வாய்க்கால் என்ற இடத்தில் அவர்களது கனரக வாகனம் புதையுண்டு போக, அவர்கள் பெரிய பாரம் தூக்கியைக் கொண்டு நகர்த்த முயற்சி செய்தபோது அது நகராமல் போக இறுதியாக ஈஸ்வர விநாயகப் பெருமானை வணங்கி கற்பூரம் கொளுத்திய பின் வாகனம் புதையுண்ட இடத்தில் இருந்து நகர்ந்தது.

இப்படிப்பல அற்புதங்களைச் செய்து கொண்டிருக்கும் ஈஸ்வர விநாயகப் பெருமானின் தேர்த்திருவிழாவினை சுழிபுரம் வாழ் அனைத்து அடியவர்களும் கண்டு களித்து விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெறுவீர்களாக!

எம் கடன் பணி செய்து கிடப்பதே

சுழிபுரம் பறாளாய்
தொண்டர் சபையினர்.

## மண்டைதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆறு பெட்டிகளில் இருந்தே, இந்ததுப்பாக்கிரவைகள் கண்டு பிடிக்கப்பட்டன என கடற்படையினர் கூறினர்.

இந்த ஆறு பெட்டிகளிலும் சுமார் 3 ஆயிரம் துப்பாக்கி ரவைகள் காணப்பட்டன எனவும், இந்தப்பகுதியில்கடந்தசெவ்வாய்க்கிழமை தாங்கள் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கைகளின் போதே இவை கண்டு பிடிக்கப்பட்டன எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, கண்டுபிடிக்கப்பட்ட ரவைகள் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டன. இவ்விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளைபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வேஸ்வரனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஆளுநர் ரெஜி னோல்ட் குரே முன்னிலையில் மிக எளிமையான முறையில் இந்தப் பதவியேற்பு வைபவம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கல்வி அமைச்சராகப் பதவியேற்கும் சர்வேஸ்வரன் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியைச்சேர்ந்தவர். அக்கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரனின் தம்பியாராவார்.

அனந்தி சசிதரன் தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா அரசியல் துறைப் பொறுப்பாள ராகவிருந்த எழிலனின் துணைவியார். கடந்த மாகாண சபைத் தேர்தலில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுத் தெரிவானவர்.

அமைச்சுப்பதவியை இராஜினாமாச் செய்த குருகுலராஜா, பொ.ஐங்கரநேசன் ஆகியோரின் இடங்களுக்கே புதிய அமைச்சர்களாக இவர்களின் பெயர்களை வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் பரிந்துரைத்துள்ளார். (உ)

## 3 மாதங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:-

புதிய அமைச்சர்களை நியமிக்கும் விடயத்தில் கட்சிகள், மாவட்டங்களின் நிலைமைகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். கட்சித் தலைவர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட வேண்டும். அதற்கு காலம் எடுக்கும்.

இதற்கு இடையில் சில நடவடிக்கைகளை எடுப்பது அவசரமாக உள்ளது. மேலதிகமாக இரு அமைச்சுக்களை உள்வாங்கியமை எனது பணிக்கு மிகச் சிரமமாக உள்ளது. பல சிக்கல்கள் உருவாகி வருகின்றன.

விசேடமாகத் தொண்டர் ஆசிரியர்கள் பிரச்சினை எழுந்து வருகின்றது. அது போன்ற பல பிரச்சினைகளைத் தனித்து ஓராளாகக் கையாள முடியாது.

அதனால்தான்கல்வி அமைச்சராக சர்வேஸ்வரனை நியமிக்கின்றேன்.

மாகாண விவசாய அமைச்சு என் கீழேயே தொடர்ந்து இருக்கும்.

என் தற்போதைய துறைகள் சிலவற்றைப் பிரித்து எடுத்துப் புதிய அமைச்சுத் துறைகளாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. மகளிர் விவகாரம், புனர்வாழ்வு ஆகிய துறைகளைக் கொண்ட அந்த அமைச்சுக்கு அனந்தி பொறுப்பாளராகச் செயற்படுவார். மக்கள் நலன் கருதியே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

புதிய அமைச்சர்களின் பதவிக் காலம் 3 மாதங்களே என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளேன். - என்றார் முதல்வர். (உ)

## பதுங்குகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவி விலகிய அமைச்சர்களுள் ஒருவர் தமிழரசுக் கட்சி சார்பில் தேர்தலில் நின்றவர் குருகுலராசா. மற்றவர் பொ. ஐங்கரநேசன் ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் போட்டியிட்டு வென்றவர்.

இவர்களில் ஒருவரின் இடத்துக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த சர்வேஸ்வரன்தற்போது அமைச்சராகநியமிக்கப்படுகின்றார்.

மற்றவரான அனந்தி தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும், அவருக்கு எதிராகக் கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

அத்தகையவரை தமிழரசுக் கட்சிக்குரிய அமைச்சர்களின் இடத்துக்கு நியமிப்பது -

அதுவும், கட்சி உத்தியோகபூர்வமாக இன்னொருவரின் பெயரைப் பரிந்துரைத்திருக்கத் தக்கதாக அதைப் புறந்தள்ளி விட்டு நியமிப்பது -

அதுவும், தமிழரசுக் கட்சிக்கு அறிவிக்காமல், தம்பாட்டில் அந்த நியமனத்தை முதல்வர் முன்னெடுப்பது -

கட்சித் தலைமைக்குள் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றமையை அறிய முடிகின்றது.

எனினும், இதற்கான பதிலடி நடவடிக்கையை அவசரப்பட்டு எடுக்காமல், தற்போது ஜேர்மனிக்குச் சென்றிருக்கும் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் நாடுதிரும்பிய பின்னர் வியூகம் வகுத்து முன்னெடுக்கலாம் என்று தமிழரசுக் கட்சியின் தலைமை கருதுவதாகவும் தெரிகின்றது.

புதிய இரு அமைச்சர்களுக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அமைச்சர் பதவியை கட்சியின் விருப்புக்கு மாறாக அபகரித்துக் கொண்டிருக்கும் அனந்தி சசிதரனுக்கு எதிராக நிலுவையில் நடவடிக்கை எடுக்காமல் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஒழுக்காற்று நடவடிக்கையை விரைந்து முன்னெடுத்து, அவரைக் கட்சியிலிருந்து நீக்கி, அதன் மூலம் அவரது மாகாண சபை உறுப்பினர் பதவியை இழக்கச் செய்ய வைப்பது -

போன்ற பல திட்டங்கள் குறித்து ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## முதல்வரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வீ.விக்னேஸ்வரன் சந்தித்த போது, அவரது தந்திரோபாய மதியுரைஞர் நிமலன் கார்த்திகேயன் அந்தக் கூட்டத்துக்குள்ளும் மூக்கை நுழைத்தாராம்.

ஆனால், சம்பந்தப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள் அவரது பிரசன்னத்தைச் சீற்றமாக ஆட்சேபித்தமையை அடுத்து அவரை அக்கூட்டத்திலிருந்து வெளியேறுமாறு முதல்வர் விக்னேஸ்வரன் பணித்தார் என்று அக் கூட்டத்தில் பங்குபற்றிய உறுப்பினர் ஒருவர் 'காலைக் கதிர்' இதழுக்குத் தகவல் வெளியிட்டார்.

அண்மைக் காலமாக முதல்வரின் சகல சந்திப்புகள், கூட்டங்கள், கலந்துரையாடல்கள், ஆலோசனைக் கூட்டங்கள் போன்றவை எல்லாவற்றிலும் தந்திரோபாய மதியுரைஞர் மூக்கைநுழைத்து, நிரந்தரமாக நிலை கொண்டிருக்கின்றமை குறித்துக் கடும் ஆட்சேபம் பல தரப்பினராலும் வெளியிடப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

நேற்று மாலை நடைபெற்ற கூட்டத்திலும் அதுவே நடந்தது.

சிவாஜிலிங்கம், ஐங்கரநேசன் போன்றோர் இந்த விடயத்தில் தமது ஆட்சேபத்தை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக வெளிப்படையாகவே முன்வைத்தனர்.

"மாகாணசபை உறுப்பினர்களுக்கும் முதல்வருக்கும் இடையிலான சந்திப்பு இது. பிறரின் பங்களிப்பும் உள்செலுத்துகையும் இதில் அவசியமற்றவை." - என்று வெளிப்படையாகக் கூறினார் ஐங்கரநேசன்.

"கூட்ட அறிக்கைப் பதிவுக்கு ஆள் தேவையில்லையா?" - என்று சிரித்துக் கொண்டு கேட்டாராம் முதல்வர். அதற்கும் ஆள் தேவையில்லை என்று உறுப்பினர்களால் பதிலளிக்கப்பட்டது.

அதையடுத்து நிமலனை அங்கிருந்து வெளியேறுமாறு முதல்வர் பணித்தார்.

சில தினங்களுக்கு முன்னர் கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபையில் அலுவலகத்தில் விவசாய அமைச்சின் உயரதிகாரிகளுக்கான கலந்துரையாடல் சந்திப்பை முதல்வர் கூட்டியிருந்தார். அந்தச் சந்திப்பில் சற்று நேரம் இருந்து விடயங்களைக் கையாண்ட முதல்வர், பின்னர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். அதன் பின்னர் எஞ்சிய கூட்டத்தை முதல்வரின் சார்பில், அவரின் தனிப்பட்ட ஆலோசகர் நிமலன் கார்த்திகேயனே நீண்ட நேரம் நடத்தினார் என்று கூறப்படுகின்றது.

முதல்வர் இல்லாத இடத்தில் அவரது பிரத்தியேகச் செயலாளரோ, ஆலோசகரோ அரச திணைக்களக் கூட்டங்களை நடத்த முடியாது, அப்படி நடத்த முயல்வது தவறு எனச் சில தரப்புகள் முதல்வருக்கு நேரடியாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றன என்றும் கூறப்பட்டது. (உ)

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய இரு அமைச்சர்களைத் தற்காலிமாக நியமிக்கும் தனது முடிவைத் தெரியப்படுத்துவதற்காகக் கூட்டமைப்பில் தமக்கு ஆதரவாக நின்ற 14 உறுப்பினர்களையும் ஒரு சந்திப்புக்கு அழைத்திருந்தார் முதலமைச்சர்.

இச்சந்திப்பு நேற்று மாலை 6.20 முதல் இரவு 8 மணி வரை நடைபெற்றது.

பதினான்கு பேரில் 11 பேரே நேற்றுச் சமூகம் தந்தனர். இருவர் வெளிநாடு சென்றுள்ளனர் எனக் கூறப்பட்டது. ஓர் உறுப்பினரான குணசீலன் மேற்படி கூட்டத்துக்குச் சமூகம்தர இயலாமை குறித்து முதல்வருக்குத் தெரியப்படுத்தியிருந்தார் எனக் கூறப்பட்டது.

"இது ஒரு தற்காலிக முடிவே. மூன்று மாதங்களுக்கு மட்டுமே உரியது.

"பதவி விலகிய இரு அமைச்சர்கள் தொடர்பான விசாரணை அறிக்கை விரைவில் மீளாய்வு செய்யப்படும். மற்றைய இரு அமைச்சர்கள் குறித்தும் விசாரணைகள் விரைந்து முன்னெடுக்கப்படும்.

"அவை முடிவடைந்ததும் நான்கு அமைச்சர்கள் தொடர்பாகவும் ஒரு முடிவு எடுக்கக் கூடிய சூழல் வரும். அப்போது, அது குறித்து இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டு நிரந்தர நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

"அச்சமயத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையில், கூட்டமைப்பின் அனைத்துப் பங்காளிக் கட்சித் தலைவர்களுடனும் கலந்துரையாடி ஒரு முடிவை எடுப்போம்." - என்றார் முதல்வர்.

"கட்சி அடிப்படையிலும், மாவட்ட அடிப்படையிலும் நியமனம் வழங்குவீர்கள் என்று கூறிய நீங்கள், இப்போது முல்லைத்தீவு மாவட்டத்தை மறந்து இரண்டு அமைச்சுக்களையுமே யாழ். மாவட்டத்துக்கு வழங்கியுள்ளீர்களே..?" - எனக் கூட்டத்தில் கலந்து கொண்டோர் குறை கூறினார்.

அதற்கு முதல்வர் விளக்கமளித்தார். "இப்போதைய நியமனம் தற்காலிகமானதே. அது தொடர மாட்டாது.

"அனந்தி யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவராயினும் அவர் வன்னியில் 15 வருடங்களுக்கு மேல் பதவி வகித்தவர். எனவே, முல்லைத்தீவை ஒதுக்கி விட்டோம் என்று அர்த்தமல்ல." - என்றார்.

அப்போது குறுக்கிட்ட அனந்தி தனக்கு வன்னியில் சொந்தக் காணி இருப்பதாகக் குறிப்பிட்டார்.

நேற்றைய இந்தச் சந்திப்பின்போது முதல்வர் விக்னேஸ்வரன், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கோ, அதன் தலைமைக்கோ எதிராகக் காழ்ப்புணர்வான கருத்து எதையுமே பிரதி பலிக்கவேயில்லை எனக் கூட்டத்தில் பங்குபற்றிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (உ)

# சிவாஜிக்கு அமைச்சுப் பதவி தர முதல்வர் விக்கி முன்வந்தாராம்!

## ஆனால் தாம் ஏற்கவில்லை என்கிறார் அவர்

(எஸ்.நிதர்சன்)

வடமாகாண அமைச்சுப் பதவிகளில் ஒன்றைப் பொறுப்பேற்று கொள்ளுங்கள் என வடமாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் விடுத்த கோரிக்கையைத் தான் மறுத்திருக்கிறார் எனக் கூறியிருக்கும் வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், அமைச்சு பதவிக்காக முதலமைச்சருக்குத் தாம் ஆதரவு வழங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக நேற்றைய தினம் யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார். இதன்போது மேலும் அவர் தெரிவிக்கையில்-

கடந்த 14ஆம் திகதிக்கு முன்னதாகவே முதலமைச்சர் என்னிடம் இது பற்றிக் கேட்டிருந்தார்.

"நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர், அதற்கு மேல்வல்வெட்டித்துறை நகரசபை தலைவராக இருந்தவர். மற்றும் எதனையும் செய்ய கூடியவர் என்றவகையில் அமைச்சு பொறுப்புஒன்றைஎடுத்துகொள்ள இயலுமா?" -- என முதலமைச்சர் என்னிடம் கேட்டிருந்தார். அவர் அவ்வாறு கேட்டதில் தவறில்லை.

ஆனால் அதனை நான் மறுத்திருக்கின்றேன். அதற்கு காரணம் நான் அமைச்சு பதவிக்காகவே முதலமைச்சருக்கு ஆதரவுவழங்கினேன் என யாரும் கூற கூடும் என்பதுடன், அமைச்சு பொறுப்புக்களை பெற்று கொண்டுவிட்டு நாங்கள் வெளி நாடுகளுக்கு குறிப்பாக ஜெனீவாவுக்கு சென்று ஒன்று, இரண்டுமாதங்கள்நிற்க இயலாது.

அதேவேளை 14ஆம் திகதிக்கு பின்னரும் முதலமைச்சர் என்னிடம் அதனைக் கேட்டிருந்தார். அப்போதும் நான் அதனை நிராகரித்தேன். மேலும் நான் அமைச்சு பொறுப்புக்களை எடுப்பதால் மற்றவர்களுக்கு தடையாகவும் நான் இருக்க கூடாது. இதேபோல் தென்னிலங்கை ஊடகங்கள் அடிக்கடி தொடர்பு கொண்டு அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்கிறீர்களா? - எனக் கேட்கிறார்கள்.

அவ்வாறு ஒருவேளை அமைச்சு பதவியை நான் பொறுப்பேற்றால் எனக்கு பலம் அதிகரித்துவிடும் என அவர்கள் அச்சப்படுகின்றார்களோ தெரியவில்லை. ஆனால் எனக்கு அமைச்சுப் பதவி கிடைப்பதில் வடக்கில் உள்ளவர்களைவிட தென்னிலங்கையில் உள்ளவர்கள் அதிகம்அக்கறைப்படுகின்றார்கள்.

மேலும் மாகாணசபையை 5 வருடங்கள் வெற்றிகரமாக நடத்தி செல்வதற்கு எந்த நிபந்தனையும் இல்லாமல், எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் ஆதரவை வழங்குவேன் என முதலமைச்சருக்கு நான் கூறியிருக்கின்றேன். -- எனவும் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார்.

# மின்சார சபைக்கு ரூ.30 கோடி வெள்ள அனர்த்தத்தால் இழப்பு

கொழும்பு, ஜூன் 9

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் இலங்கை மின்சார சபைக்கு 30கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.


அனர்த்த நிலைமை காரணமாக 7 இலட்சத்து 73 ஆயிரம் மின்சார பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு மின்சார வசதிகளை மீளப் பெற்றுக் கொடுக்க இலங்கை மின்சார சபை துரித நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் நிலவும் வறட்சி நிலைமை காரணமாக மின்சார உற்பத்திக்கென மேலதிக எரிபொருள் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்காக 3 ஆயிரத்து 300 கோடிரூபா செலவிடப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நீர் மின்சாரத்தை பிறப்பிக்கும் நீர்த்தேக்கங்களில் 47 வீத நீர் கொள்ளளவே உள்ளது. ஆனால், கடந்த வருடம் இந்த நீர் கொள்ளளவு 70 வீதம் வரை காணப்பட்டது என்றும் அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார். (உ)

# நாளை மின் தடை



உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில் பறையனாலங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை சிலாவத்துறை கடற்படை முகாம் முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை C.E.C.B, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், அடம்பன் நீர்ப்பாசனசபை, கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், C.T.B மன்னார், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்திய சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, ரைமெக்ஸ் கார்மெனட், விசேட அதிரடிப்படை முகாம், எருக்கலம்பிட்டிபம்கவுஸ், வங்காலைப்பாடு ஐஸ்தொழிற்சாலை, பேசாலைஐஸ்தொழிற்சாலை, மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ்தொழிற்சாலை, ல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத்துறை முகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

# பெண்களுக்கான 'உள்ளாடைத் துணி' உற்பத்தி மையம் முல்லைத்தீவில்!

## பிரித்தானியாவில் இயங்கும் யாழ்.இந்து பழைய மாணவர் ஒன்றியம் ஏற்பாடு

முல்லைத்தீவு, ஜூன் 29

பிரித்தானியாவில் இயங்கும் யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஒன்றியம் வன்னியில் சிறு கைத்தொழில் முயற்சிக்கான ஊக்குவிப்பாக முல்லைத்தீவு நகரில் பெண்களுக்கான சுகாதார உள்ளாடைத் துணி (Sanitary Napkin) உற்பத்தி மையம் ஒன்றை நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு திறந்துவைக்கின்றது.

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே இந்தத் தொழிற்சாலையைத் திறந்து வைப்பார்.

மறுவாழ்வு பெற்ற முன்னாள் பெண் போராளிகள், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வசிக்கும் குடும்பங்களின் தலைவிகள், விதவைகள் என இந்தத் தொழிற்சாலையில் சுமார் 40 பெண்களுக்கு பணிநிலைப் பதவி கிட்டுமென தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஒன்றியம் - பிரித்தானிய அமைப்பால் சுமார் 70 லட்சம் ரூபா முதலீட்டில் ஆரம்பிக்கப்படும் இந்த உற்பத்தி மையத்தை முல்லைத்தீவு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் இணையம் நிர்வகிக்கும்.

இணையத்தின் சார்பில் கோயில்குடியிருப்பு மாதர் சங்கத்தைச் சேர்ந்த திருமதி இமக்குலேஸா நிர்வாக நடவடிக்கைகளைக் கவனிப்பார்.

ஒரு மணி நேரத்துக்கு சுமார் 600 உள்ளாடைத் துண்டுகளைத் தயாரிக்கும் திறனை இங்கு பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் கொண்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு நகரத்தை ஒட்டி முல்லைத்தீவு அரச அதிபரால் வழங்கப்பட்ட ஒரு கட்டடத்தை புதுப்பித்து இந்த உற்பத்தி மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாளைய ஆரம்ப நிகழ்வில் முல்லைத்தீவு அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜே.சி.சி.பெனிஷியன், வடக்குமாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா, யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஒன்றியம் - பிரித்தானிய அமைப்பின் பிரதிநிதிகளான கு.சிவாஜி, ப.விவேகானந்தன் ஆகியோர் பங்குபற்றுவர். நிகழ்வுக்கான ஒருங்கிணைப்புக்களை முல்லைத்தீவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சாந்தகுமார் முன்னெடுத்து வருகிறார். (உ)

# ஆலய மஹோற்சவங்கள்

கோண்டாவில், ஜூன் 29

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய மஹோற்சவம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த ஆலய மஹோற்சவம் பத்து தினங்கள் நடைபெறும் நிலையில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ)

***

அரியாலை, ஜூன் 29

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய (நாச்சிமார் கோவில்) மணிக் கோபுர கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.15 மணி முதல் 11.12 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மணிக்கோபுர கும்பாபிஷேகத்திற்குரிய கிரியைகள் இன்று அதிகாலை 5.51 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. (இ)

***

சுன்னாகம், ஜூன் 29

மல்லாகம் - கோட்டைக்காடு சாளம்மை முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (இ)

***

புங்குடுதீவு, ஜூன் 29

புங்குடுதீவு - குறிகாட்டுவான் ஸ்ரீமனோன்மணி அம்பாள் (பேச்சி அம்மன்) ஆலய வருடாந்த மகோற்சவம் திங்கட்கிழமை மகோற்சவ குரு சிவஸ்ரீ சதாசங்கரதாஸ் குருக்கள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன் கிழமையும் இடம்பெறவுள்ளன. (இ)

***

பண்டத்தரிப்பு, ஜூன் 29

மாதகல் நுணசைகூடல் விளாத்தி சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய மணவாளக்கோல விழா எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் காலை 8 மணிக்கு 108 சங்காபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து சாந்தநாயகிசமேதசந்திரமௌலீஸ் வரருக்கு திருக்கல்யாணம், விசேடபூசை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்று சுவாமி வீதியுலாவலம் வரும் நிகழ்வும் இடம்பெறும். (இ)

# மருத்துவப் படிப்புக்காக ரஷ்யாவுக்கு விரைகிறது 'சைட்டம்' மாணவர் குழு!

## எதிர்ப்புகளின் மத்தியில் கல்லூரி நிர்வாகி நடவடிக்கை



மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக பரவலாக எதிர்ப்புகள் வலுப்பெற்று வரும் நிலையில் அந்தக் கல்லூரியில் பயிலும் மாணவக் குழு ஒன்றை ரஷ்யாவில் மருத்துவப் படிப்புகளுக்காக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் ஆட்சேர்ப்பை ஒருவர்த்தமானி அறிவித்தலால் நிறுத்த முடியாது என்று கல்லூரி நிர்வாகி நெவில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

தமது கல்லூரி முகாமைத்துவத்தின் நிலைப்பாடுகள் அடங்கிய மகஜர் ஒன்றை ஜனாதிபதியின் செயலாளரிடம் தான் கையளித்துள்ளார் எனவும் அதனை ஜனாதிபதியிடம் கையளிக்குமாறு செயலாளரைக் கோரினார் எனவும் அவர் மேலும் கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தில் அங்கம் வகிப்போர் மக்களின் பணத்தில் கல்வி உட்பட அனைத்து சலுகைகளையும் பெற்றுத் தற்போது பல்கலைக்கழக மாணவர்களை சைட்டத்துக்கு எதிராக ஏவி விட்டுள்ளனர்.

மேலும் தங்களின் தனிப்பட்ட விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளவே வைத்திய அதிகாரிகள் இது போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். அதற்கு அவர்கள் ஆயிரக்கணக்கான அப்பாவி நோயாளர்களின் வாழ்வைப் பணயம் வைத்து செயற்படுகின்றனர்.

மாணவர்கள் ஆட்சேர்ப்பை ஒரு வர்த்தமானி அறிவித்தலால் நிறுத்த முடியாது. தமது கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனினும், ஜூலை மாதம் 5ஆம் திகதிக்குப் பின்னர் மாணவர்களை இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.-என்றார்.

இதேவேளை, சைட்டம் நிறுவனத்துக்கு எதிராக நேற்றும் கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இந்த நிலையில், மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் கடும் நிலைப்பாடுகளை விடுத்து, விரைவில் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுக்கு வருமாறு, இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(எ)

# புனித ஜோண் பொஸ்கோவுக்கு இணையம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஆரம்பித்தல் மற்றும் மரநடுகை நிகழ்வு, இன்று வியாழக் கிழமை காலை 7.45 மணிக்கு இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் அருட் சகோதரி எம். ஜெரோம் கலந்து கொள்வார்.

இவ்விரு நிகழ்வுகளுக்கும் பாடசாலையின் பழைய மாணவர்கள் அனுசரணை வழங்குகின்றனர். (இ)

# ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இன்று

சண்டிலிப்பாய், ஜூன் 29


வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேசசெயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யு.ஜேசோதா அறிவித்துள்ளார். (இ)

# நீதிமன்றக் கட்டடக் கூரையில் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறைக்கைதி

தம்புள்ளை, ஜூன் 29

தம்புள்ளை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட சிறைக் கைதி, நீதிமன்றக் கட்டடத்தின் கூரையில் ஏறி நேற்று உண்ணா விரதத்தில் ஈடுபட்டார்.

போகம்பரை சிறைச்சாலையில் 16 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தனக்கு உரிய தீர்வொன்றை வழங்குமாறு கோரிக்கை விடுத்து, சிறைக்கைதி திடீரென இந்தப் போராட்டத்தில் இறங்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.



போகம்பரை சிறைச்சாலையில் இருந்து தம்புள்ளை மாவட்ட நீதிவான் நீதி மன்றத்துக்கு நேற்றுக் காலை அழைத்துவரப்பட்ட நிலையில் சிறைக் கைதி, கூரையில் ஏறி ஆர்ப்பாட்டம் நடத்தினார். (எ)

காலைக்கதிர்
Kalaikkathir





# பறாளாய் ஈஸ்வர விநாயகர் தேர்த்திருவிழா சிறப்பு மலர்

29.06.2017

# அற்புதங்கள் புரிந்துவரும் ஈஸ்வர விநாயகப் பெருமான்

## சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் இரதோற்சவம்

வரலாற்றுச் சிறப்புமிக்க மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றால் பிரசித்தமாக விளங்கும் சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகரின் இரதோற்சவ திருநாளில் சுழிபுரம் பறாளாய் தொண்டர் சபையினர் ஆகிய நாங்கள் எமது ஈஸ்வர விநாயகப் பெருமானின் தெய்வீக அற்புதங்களை அடியவர்கள் அனைவருக்கும் தெரியப் படுத்திக்கொள்ள விரும்புகின்றோம்.

வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருத நிலத்தில் எமது ஆலயம் அமைந்து இருப்பதால் சின்னத்தம்பி புலவர் பறாளாய் 'விநாயகர் பள்ளு' எனும் நூலில் ஆலயத்தின் சிறப்புக்களைப் பாடியுள்ளார்.

பதினைந்தாம் நூற்றாண்டு காலப் பகுதியில் போர்த்துக்கேயர் நமது நாட்டுக்கு வந்து தமது சமயத்தைப் பரப்பும் நோக்குடன் சைவ ஆலயங்களை இடித்து அழித்தனர். அந்த வகையில் எமது ஆலயத்தை இடிப்பதற்காக வந்த போது ஈஸ்வர விநாயகர் காக்கை வடிவம் எடுத்து இடிக்க வந்தவர்களின் கண்ணைக் கொத்தி அவர்களை அந்த இடத்தில் இருந்து துரத்தி அனுப்பினார். இதனால் அவருக்கு கண்ணை கொத்திக் காத்த பிள்ளையார் என்று புனை பெயரும் உண்டு.

[17 ஆம் பக்கம் பார்க்க]

## ஈஸ்வர விநாயகரின் தேர் உலா அடியவர்களுக்குக் கண்கொள்ளாக் காட்சி

இன்று தேர்த் திருவிழா, ஈஸ்வர விநாயகரின் 350 வருட சரித்திரத்தில் ஒரு முக்கிய நாளாகும். பறாளாய் ஈஸ்வர விநாயகர் சுழிபுரம் வாழ் மக்களால் புதிதாகச் செய்து வழங்கப்பட்ட தேரில் வருவது ஓர் அற்புதக் காட்சியாகும். அத்துடன், புதிதாக அமைக்கப் பட்ட பறாளாய் வீதியும் அமைந்துள்ளது இறைவனின் திருவருளே.

ஈஸ்வர விநாயகர் வருடாவருடம் முன்நோக்கி வளர்வதன் காரணம் ஆலய பரம்பரை பூசகர் பிறைசூடிக் குருக்கள் ஐயாவும், சுழிபுரம் வாழ் மக்களும் ஆலய தர்மகர்த்தா சபையினரும் அத்துடன், பறாளாய் தொண்டர் சபையினரும் ஆவர்.

அடியார்கள் அனைவரும் ஈஸ்வர விநாயகப் பெருமானின் அருளைப் பெற்று நீண்ட காலம் சுகமாக வாழ ஈஸ்வர விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

Dr.பூ.கயிலாயநாதன்
த.உலகநாதன் (JP)
Dr.க.சண்முகராசா.
ஆலய தர்மகர்த்தாவும் நிர்வாகியும்.

## மஹோற்சவ குருக்களின் ஆசி



யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்கு சுழிபுரம் பறாளாய் எனும் புண்ணிய சேத்திரத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற ஈஸ்வர விநாயகப் பெருமானின் திவ்வியமான மஹோற்சவத்தின் பதினாறாம் நாளான அழித்தல் தொழிலான இரதோற்சவம் இன்று நிகழ்கின்றது.

இந்த இரதோற்சவ நன்நாளில் எம்பெருமான் பஞ்சமுக ஈஸ்வர விநாயகர் பஞ்சகோண இரதத்திலே ஆரோகணித்து வீதிவலம் வருகின்ற இந்த அற்புதக் காட்சியைக் காண ஆயிரம் கோடி கண்கள் கூட போதா.

இந்தத் தருணத்தில் ஆலய பரம்பரைப் பூசகர் பிறைசூடிக் குருவுக்கும், ஆலய தர்மகர்த்தாவினரும், ஆலய தொண்டர் சபையினரும் மற்றும் சுழிபுரம் வாழ் அடியார்களும் எம்பெருமான் ஈஸ்வர விநாயகரின் திருவருட் கடாட்சம் நித்தியமாகவும், நிரந்தரமாகவும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

சுபம் அஸ்து

*ஆலய மஹோற்சவ பிரதம குரு*
*சபா. பாஸ்கரக் குருக்கள்*
*பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும்*
*பண்டாரி அம்பாள் ஆலயம், தம்பசிட்டி*
*பருத்தித்துறை.*

## விநாயகப் பெருமானின் அருளால் தமிழருக்கு விடுதலை கிடைக்கட்டும்!



பார் புகழ்ந்தேத்தும் சுழிபுரம் பறாளாயில் பள்ளி கொண்டு அருளாட்சி புரியும் சர்வ வல்லமை பொருந்திய ஈஸ்வர விநாயகரின் தேர்த்திருவிழா வைபவம் இன்றாகும். ஈஸ்வர விநாயகன் தேரேறி பவனி வரும் காட்சி ஓர் கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஈஸ்வர விநாயகனின் பழைய தேரில் காணப்பட்ட சிற்பங்கள் 'பறாளாய்' என தனித்துவமான சிறப்புப் பெற்றவையாகும். தற்போதைய தேரையும் அதனை மருவியே அண்மையில் உருவாக்கியுள்ளார்கள். இவ்வாறான வரலாற்றுச் சிறப்புடைய தேரிலே ஈஸ்வர விநாயகப் பெருமான் தேரேறி பக்தர் குறை தீர்த்து மேலும் வரலாற்றுச் சிறப்புக்களை நாட்டு மக்களுக்குப் படைப்பாராக. நாடு நன்மை அடையட்டும். தமிழருக்கு விடுதலை கிடைக்கட்டும். "நம்பிக்கை கொண்டோர்க்கு நம்பிக்கையான் துணை"

சோழியூரான் பிறைசூடிக் குரு.
தேவஸ்தான சந்ததிப் பூசகர்.

PC POINT
No.132, Main Street, Chankanai.
021 2250020
0779439400

RAAM
Muliti Center
Main Street, Chulipuram.

ஸ்ரீ ராம் எலக்ரிக்கல்ஸ்
0766093239
பொன்னாலை வீதி, சுழிபுரம்.

கேதீஸ் களஞ்சியம்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்
சத்தியக் காட்டுச் சந்தை, சுழிபுரம்.

வரதலட்சுமி வெதுப்பகம்
காளுவன் சந்தி, சுழிபுரம்.
0779967435

வெஸ்ரன் பார்மசி பேபி நீட்ஸ்
பிரதான வீதி, சங்கானை.

சிவம் களஞ்சியம்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்
பிரதான வீதி, வழுக்கம் பறை.
0212250160

கனேஸ் ஸ்ரோர்ஸ்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

நவகிருஷ்ணா நெற் கபே
NAVAKRISHNA NET CAFE
No. 21, Main Street, Chankanai.
0773867036
FAX 021 2250210

Karan
Steel & Aluminum Works
Main Street.
0776913404

K.J ராணி நகைத் தொழிலகம்
077 483 0035
075 544 4118

IT LAND
www.jaffnaitland.tk
E-mail - jaffnaitland@gmail.com
021 2250770
+94777352479
Main Street, Chulipuram.

Rabithan Motors
ரபிதன் மோட்டோர்ஸ்
மோட்டார் சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர்.
0778339493
பிரதான வீதி, சுழிபுரம்.

பறாளாய் விநாயகரின் அருள் பெற்றிட பிரார்த்திக்கின்றோம்

THEVI GRINDING Mill
தேவி கிறைண்டிங் மில்
சகல மில் வேலைகளும் குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன் செய்து தரப்படும்
பிரதான வீதி, வழுக்கம்பறை.

PAKIYARATNAM Hard Ware Stores
Distributors for Elephant brand soft drinks
No - 163, 165 Main Street, Chankanai.
021 225 1244, 021 321 2713
Mail-PAkiyaratnam.ccs@Gmail.com
Hotline - 0775577335
021 22 50105

நகுலேஸ் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
கட்டடப் பொருள்கள், பெயின்ற் வகைகள், மலசல கூடச் சிங்க்கள், எஸ்லோன் பைப்கள், கம்பி வகைகள், சைக்கிள் உதிரிப் பாகங்கள் ஆகியவற்றின் மொத்த சில்லறை விற்பனையாளர்.
சித்தங்கேணி, பண்டத்தரிப்பு.
0778102898

Arsh
Make - up Studio
Bridal Make - up,
Party Make - up,
Casual Make - up and etc... Day, Evening
Indian, Eastern, Arabic and Eropeon Make-up Styles.
Eyebrow Threading.
0764166351
Urumpirai East, Urumpirai.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல. 31 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.